M. 1803. Vol. I—No. 12

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 1-க்கு ரூ. 12, 14, 16, 18.

ஷெ ஜரிகை கரைகள் போட்டது ரூ. 16 முதல் 20 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளை பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர்:—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு ரூ. 15, 18, 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

பொத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

அமிர்தாஞ்சனம்.

அமிர்தாஞ்சன்

அமிர்தாஞ்சன்

இருபத்தைந்து வருஷமாக லக்ஷக்கணக்காக விற்று வருகிறது. அபூர்வ மூலிகைகளில்னு தயார் செய்யப்பட்டு அழகாய் பாக் செய்து, உபயோகத்துக்குத் தயாராயிருக்கிறது.

எல்லா நோவுகளுக்கும்,

ஒரு கைகண்ட அவுஷதம் அமிர்தாஞ்சனமே தலைவலி, முதுகுவலி, கீழ் பிடிப்பு முதலிய எல்லா நோவுகளையும் நொடிப் பொழுதில் தீர்க்கும்.

உடனே முந்துங்கள், அணா பத்து தான்.

அமிர்தாஞ்சன் டிபோ,

பம்பாய்,

7, தம்புசெட்டி வீதி, சென்னை.

SEP 19

ஒரு வருஷப் பலன்.

பெயரையும் கடிதம் எழுதும் நேரத்தையும் சொந்தக் கையெழுத்தா லெழுதி யனுப்புவோருக்கு இன்னும் ஒருவருட காலத்திற்கு என்னென்ன நடக்கு மென்பதை சரியாக குறித்து அனுப்பப்படும். விலை ரூபா ஒன்றுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். பரிட்சித்துப் பார்த்தவர்கள் பலர் ஆச்சரியப்பட் டிருக்கிறார்கள். வி. பி. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும்.

ராவ் நாயுடு,

சௌக்கார்பேட்டை, சென்னை.

குறைந்த விலை! உயர்ந்த நாவல்கள்!!

"நவீனகம்"

ஒரு மாதாந்தர நாவல் சஞ்சிகை.

1923௵ நவம்பர்௴ முதல் வெளி வந்துகொண்டு இருக்கிறது. இதில் ஒவ்வொரு இனிய நாவல் பிரதி மாதமும் தொடர்ச்சியாகவரும். இப்போது முதல் கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. அவர்களால் எழுதப்பட்ட ஜஸ்வந்தஸிங் என்னும் நாவல் வெளிவரும். இச்சஞ்சிகை கிரௌன் 48-பக்கங்கள் கொண்டது. வருஷ சந்தா (ரூ. 1—0—0) ரூபாய் ஒன்றுதான். அடியில் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி சஞ்சிகையை வி. பி. யிலோ, முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பு:—முன் பணம் அனுப்பினால் ரூபாய் ஒன்றும் மணியார்டர் கமிஷன் 2 அணா வாகும்.

வி. பி. யில் ரூபா 1—4—0 ஆகும்

வெளி நாட்டிற்கு ரூபா 1—8—0.

தி. இராஜேஸ்வரம் & பிரதர்ஸ்,

சாமிதெரு, ஆலந்தூர், பரங்கிமலை.

Forewarned is Forarmed!

Past, Present, Future!!

Accurate, Reliable, Genuine!!!

The Divine Science practised by the Hindu Sages of Ancient India :—Foretelling Prophesying.

My **Occult Art Studio**, *the premier in S. India, will answer your querries with remarkable success and exactitude.*

Therefore

Consult me in moments of anxiety and suspense. Send questions relating to Employment, Examination, Marriages, Patients etc., in a sealed envelope. Corrrect answers given without opening the cover. Governmental Theft and Testing questions not attended to. Give your star or date of birth or time of writing.

No Value Payable Post. Send remittance in advance.

Correspondence either in English or Tamil. Highest testimonials awarded. If our answers prove unsatisfactory and incorrect the amount will be refunded.

	INLAND (INDIA, BURMA & CEYLON.)	FOREIGN (STRAITS, F.M.S., S. AFRICA, ETC.)
Charges 1 to 6 question	Rs. 2	Rs. 3
Each question above six	0-8	Rs. 1
One year Life Reading	Rs. 3	Rs. 4
Five years Life Reading	Rs. 6	Rs. 7-8
Full Life Reading	Rs. 15	Rs. 20

For further particulars, please apply with stamped envelope for reply.

G. A. S. SASTRI,

BHARATH ASTROLOGICAL BUREAU,

Punalur, Travancore State (S. I. R.)

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் எழுதிய

புதிய நாவல்கள்

லோகநாயகி

அல்லது

அதிசயப் புதையல்.

பண ஆசை எத்தகைய பெரும் பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும் அக்கிரமஸ்தரும், நம்பின வர்களை துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகியாகிய லோகநாயகியின் புத்தி சாதுர்யமான நடக்கைகளும், துப்பறிபவளது சாமர்த்தியமும், ஆரம்பத்திலிருந்தே ஒன்றின்பின் ஒன்றாக நேரிடும் அதிசய சம்பவங்களும், போய்விட்டதென்று யாவரும் கைவிட்டுவிட்ட பொக்கிஷத்தைத் துப்பறிபவன் எடுத்தளிக்கும் சாமர்த்தியமும் நீதியும், இதை வாசிப்போர்க்கு ஆதிமுதல் அந்தம் வரை வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும். இதில் சம்பந்தப்பட்டிருக்கும் ஆட்களில் ஒவ்வொருவர் நடக்கையும் உற்று நோக்குபவர்களுக்கு நல்ல நீதிகளைக் கற்பிக்கும். விலை ரூ. 1—0—0.

	ரூ.	அ.
விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக் கொலை ...	1	6
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	1	12

பவளத்தீவு 2-பாகம்	3	0	கமல சேகரன்	1	12
தபால்கொள்ளைக்காரர்கள்	0	14	தினகர சுந்தரி	1	0
இந்திராபாய்	2	8	ரத்னபுரிரகசியம்2-பாகம்	4	0
அமராவதி 2-பாகம்	4	0	மதனபூஷணம்	1	0
மஞ்சள் அறையின் மர்மம்	1	8	சுவர்ணாம்பாள்	0	12
கற்கோட்டை	2	0	தேவசுந்தரி	1	4
பூங்கோதை	0	10	குணசுந்தரன்	0	12
வீரநாதன்	0	12	பத்மாஸனி	0	14
கனக பூஷணம் 2-பாகம்	3	8	ஆனந்தஸிங்	2	0
சகோதர வாஞ்சை	0	6	மின்சார மாயவன்	1	8

மானேஜர் :—

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,

1-6, வெங்கடேச மேஸ்திரி தெரு,

சவுகார்பேட்டை, மதராஸ்.



கார்மிக்கேல் நூல் நிலையம், காசி.

ஓம்

லக்ஷ்மி

29 SEP 1924

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. ரக்தாட்சி௵ ஆடி௴ 1924 ஜுலை இதழ் ௰௨

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	571
2.	தமிழ்	572
3.	ஒழுக்க வழக்கங்கள்	573
4.	வேதப் பயிற்சி	578
5.	நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும் ...	586
6.	ஐந்து எக்கரில் சுயராஜ்யம்	590
7.	ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	600
8.	காலஞ்சென்ற ஸ்ரீமதி முனியம்மாள் ...	604
9.	பூரி அல்லது ஜகன்னாத்	605
10.	முரசொலி	608
11.	விசேஷக் குறிப்புகள்	614
12.	மதிப்புரை	620

சித்திரப் படங்கள்.

1. கார்மிக்கேல் நூல் நிலையம், காசி.
2. கனந்தங்கிய C. P. ராமஸ்வாமி அய்யர், C.I.E.,
3. திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளையவர்கள், F.R.H.S., M.R.A.S., etc.

2/8340
சென்னை 600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட
இந்தியா, பர்மா, சிலோன் ... ... ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட
சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி
நாடுகளுக்கு ... ... ரூ. 2 8
உயர்ந்த பதிப்பு (Art Paper) ... ... ரூ. 10 0

தனிப்பிரதி அணா 4.

ஜவாஹிருல் புர்:கான்

جواهر الفرقان في ترجمة القرآن

(குர் ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பும் அதன் விரிவான வியாக்கியானமும் ஒருங்கே கூடியது.)

11-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் கொண்ட 160 பெரிய பக்கங்களுள்ள முதல் வெளியீட்டின் கிரயம் ரூ. 1-8-0. இதுவரை 750 பிரதிகள் வெளியாய்விட்டன. இன்னும் சில பிரதிகளே எஞ்சி யிருக்கின்றன. பெரிய நூல்! அரிய வியாக்கியானம்! இன்றே எழுதுங்கள்!! ஏமாந்து போகவேண்டாம்!!!

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ், தபாற் பெட்டி 15, சென்னை.

தாருல் இஸ்லாம்.

இஃது இனிய தமிழில் உயர்ந்த நடையில் அதிரஸத்துடன் ஆனந்தமயமாய் எழுதப்பட்ட அநேக அருமையான வியாசங்களை யுடையது. தமிழ் நாட்டுச் சோதர சோதரிகளுக்குத் தக்க அறிவை யூட்டுவது. இஸ்லாத்தின் உயரிய தன்மையை உரைத்து விளக்குவது. ஸமரஸ நோக்கங்கொண்டது. இஸ்லாத்தின் ராஜீய தேசீய ஞானத்தை எடுத்துணர்த்துவது. தமிழ் மொழி வளர்ச்சியில் மிக ஊக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 3. வெளி நாட்டுக்கு ரூ. 4.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ், தபாற் பெட்டி 15, மதராஸ்.

ஆர்மோனியா சாதா சுருதிப் பெட்டிகள்.

எங்கள் கம்பெனியில் எவ்விதமான ஆர்மோனியங்களும் சங்கீத அப்பியாசம் செய்யும் புஸ்தகங்களும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

3 சுரம் சுருதிப் பெட்டி 1-க்கு ரூ.		7
5 சுரம்	,,	9
7 சுரம்	,,	10
9 சுரம்	,,	12
13 சுரம்	,,	13

வி. பி. சங்கரம் & கோ., 211, தங்கசாலை தெருவு, மதராஸ்.

ஓம்

லக்ஷ்மி துதி

அனைவரும் போற்றும் நெடுமா
லும் நீயும் அடல் கருடன்
தனை எழில் வாகனமாக் கொண்
டென் உள்வரும் சத்தியத்தை
பினையுள்ள பேரறி யத்தக்கவா
றருள் பெய்வ தென்றே
மனையெனத் தாமரைப் பூவையெல்
லாம் கொள்ளும் மாணிக்கமே!

தமிழ்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும். (1)

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்: ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! (2)

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும். (3)

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார். (4)

பாரதி.

ஒழுக்க வழக்கங்கள்

ஸ்ரீமாந் சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதியது.

பற்பல தேசங்களில் வாழும் பற்பல சமூகங்களிலும் ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு காரணம் பற்றிப் பற்பல ஒழுக்க வழக்கங்கள் (ஆசாரங்கள்) தோன்றின. இங்ஙனம் சில காரணங்களை முன்னிட்டுத் தோன்றிய ஒழுக்க வழக்கங்கள், ஒரு சமூகத்தில் எக்காலத்தும் அழியாமல் நிலைபெற்றிருக்க வேண்டு மென்பது நியதியன்று. பண்டொரு காலத்தில் மக்களுக்கு நன்மை பயந்துவந்த ஒரு ஆசாரம் (அல்லது ஒழுக்கம்), பின்னொரு காலத்துத் தீமை பயப்பதாக மாறி விடுதலுங் கூடும். அப்போது, மக்கள், அத்தீமை பயக்கும் ஒழுக்கத்தை நீக்கி, அதன் தீமைகளி னின்றும் விலகிக் கொள்ளுதல் வேண்டும். கூடுமானால், நன்மை பயக்கும் வேறு நல்ல ஒழுக்கங்களைக் கைக்கொள்ளுவது நன்று. இவ்விதம் செய்வதற்குச் "சீர்திருத்தம்" என்று பெயர்.

நம் மூதாதையர் காலந் தொட்டு பரம்பரையாக வந்த ஒழுக்கமாயிற்றே! ஆன்றோருண்டாக்கிய வழக்கமாயிற்றே! இதை எப்படி விடுவது? என்று சிந்திப்பது அறிவாகாது. மற்று, ஒரு ஒழுக்கம் பண்டை நாட்களில் எக்காரணம் பற்றி ஒழுகப்படலாயிற்றென்பதையும் இக்காலத்து நாம் அதனை எக்காரணங் கொண்டு ஒழித்துவிடுதல் வேண்டு மென்பதையுமே நாம் சிந்திக்க வேண்டும். அங்ஙனமே, ஒரு புது ஆசாரத்தை நவீனமாக மேற்கொள்ளும் போதும், அந் நவீன ஆசாரம் மக்களுக்கு எத்தகைய நன்மை பயக்கும் என்பதையே யோசித்த லவசியம். தீமை பயக்கும் பண்டைநாள் ஒழுக்கங்களை உரிமை பாராட்டி விலக்காம லிருப்பதும், நன்மையுண்டாக்கும் நவீன வழக்கங்கள் புதியனவென்று அவற்றைப் புறக்கணித்துத் தள்ளுவதும் மக்களுக்குத் தீமையைப் பெருக்கித் துன்பம் பயப்பன வாம்.

காகிதத்தாள் கிடையாத பண்டைநாட்களில் நம் மூதாதையர் பனையோலை ஏடுகளில் நூல்களை எழுதி வைத்தனர். அக்காலத்துப் பள்ளிப் பிள்ளைகள், கற்பலகை யில்லாதது கொண்டு, மணற்றரையில் எழுத்துகளை விரல்கொண்டு எழுதிப் பயின்றனர். ஆனால், காகிதத் தாளும் கற்பலகையும் ஏராளமாக வுள்ள இந்த நவீன நாட்களில், பழைய ஆசாரத்தை விடமாட்டோ மென்று புராணம் பேசிப்

பனையேட்டிலும் மணல் தரையிலும் நாம் எழுதி வருவோமானால், நம்மை அறிவாளிகள் மூடர் என்று இகழ்ந்துரைத்து நகையாடாமலிருப்பரா? அன்றியும், நாம் எளிதாகக் கல்வி கற்கவுந்தான் முடியுமா? காகிதத் தாளும் கற்பலகையு மில்லாத பண்டைக்காலத்தில், பனை ஏடுகளும் மணல் தரையும் பேருதவியா யிருந்தன வென்பது மறுக்கொணு வுண்மையே. ஆனால், பழைமை பாராட்டி அவ்வழக்கத்தையே நாம் இந்நாளிலும் கையாண்டு வருவோமானால், அவ்வழக்கங்கள் இக்காலத்து தீமையாய் முடியு மன்றோ?

இதனைப் போன்றே ஒவ்வொரு ஒழுக்க வழக்கமும் ஆசாரமும் ஒவ்வொரு காலத்தில் மக்களுக்கு நன்மை பயந்து, பிறிதோர் காலத்தில் பேரிடர் விளைவிப்பனவா இருக்கின்றன. நமது நாட்டைப் பொறுத்த மட்டில் பேசுவோ மாயின், பன்னூற்றாண்டுகளுக்கு முன் நம் முன்னோரால் உண்டாக்கப்பட்டு வழிமுறையாக இதுகாறும் நம்மனோரால் ஒழுகப்பட்டு வரும் ஒழுக்கங்கள் எத்தனையோ வுள. இப்புராதன ஒழுக்கங்களில் சில மக்களுக்கு நன்மை பயப்பனவாயினும், பெரும்பான்மை யானவை, தீமைகளையும் துன்பங்களையும் கொடுமைகளையும் விளைவிக்கின்றன. இத்தீமைகளை யுண்டாக்கும் அப்புராதன ஒழுக்கங்கள், "பெரியோர் ஆசாரம்" என்னும் உரிமையோடு, யாதொரு சீர்திருத்தமு மின்றி இன்றுவரை நம்மனோரால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வொழுக்கங்கள், நம் மூதாதையர் காலத்தில் நன்மை பயந்திருக்கலாம். ஆனால், கால வேறுபாட்டாலோ அன்றி வேறு எக்காரணத்தாலோ இப்புராதன ஒழுக்கங்களிற் பல இது காலே நமக்குப் பேரிடர் விளைவிப்பனவா யுள்ளன. இவை, நம்மனோருக்குப் பெருந் துன்பங்களையும், வறுமையையும், துவேஷத்தையும் அவமானத்தையும் நிந்தனைகளையும் பழிபாவங்களையும் அடிமைத்தனத்தையும் இன்னும் சொல்லொணுத் தீமைகளையு மெல்லாம் அனுபவிக்கச் செய்து வருகின்றன. நமது முன்னேற்றத்தையும் தடுத்து நிற்கின்றன. இக்கொடிய ஒழுக்கங்களை நாம் இன்னும் கண்மூடித்தனமாக கைக்கொண் டொழுகுவதை விட்டு, இவற்றை அடியோடு ஒழித்து நன்மை யுண்டாக்கும் நவீன ஒழுக்கங்களை மேற்கொள்வ தவசியம். "சீர்திருத்தம்" என்று சொல்லிக் கொண்டு மேடைமீதேறி வாய்ப்பறை யடிப்பது போதாது. நடவடிக்கையில் கையாளுதல் வேண்டும்.

"சீர்திருத்தம்" என்னும் சொல்லுக்கு "அநாகரிகம்" என்று தவருகப் பொருள் செய்து அதற்கு எதிராக நின்று முட்டுக் கட்டையிடுவோர் நம்மனோரில் அநேகர் உண்டு. இவர்கள், கல்வியறிவும் யோசிக்குந் திறனு மில்லாத பெண் மக்களும், வைதீகர்களுமே. இவர்களின் முக்கிய கொள்கைக ளெல்லாம், தமது மூதாதையர் ஒழுகிய ஒழுக்கத்தைக் கைவிடக் கூடா தென்பதே. இவர்கள், வழக்க ஒழுக்கங்களின் நன்மை தீமைகளை யாராய்வ தில்லை. குளித்து முழுகுவதும் வீடுகளைச் சுத்தமாக வைப்பதும் வேட்டிகளை

வெளுத்து உடுப்பதும் இவர்கள் ஏன் செய்கிறார்கள் என்று வினவினால், "பெரியோர் ஒழுகிய ஆசாரம்" என்பார்களே யன்றி வேறு காரணஞ் சொல்லத் தெரியாதவர்கள். கற்றவர்களிலும் சிலர், சுயநலங் கருதி, சீர்திருத்தத்திற்கு எதிராகப் போராடுவோரும் உளர்.

இனி, நாம் சீர்திருத்த வேண்டிய ஒழுக்கங்கள் யாவை? ஏன் அவை சீர்திருத்தப்பட வேண்டும்?

சுதேச மன்னர் ஆட்சி நிலைகுலைந்த பின்னர், பெண் கல்வி கூடாதென்னும் மூடக் கொள்கை, பல நூற்றாண்டுகளாக நம்மவர்க்குள் வேரூன்றி யிருந்தது. இதனால், நமது பெண் மக்கள் பல நூற்றாண்டுகளாகக் கல்வியின்றி அஞ்ஞான இருளில் உழன்று துன்புற்றிருந்தனர். பிறகு சில ஆண்டுகளுக்கு முன்பு பெண் கல்வி அவசியமானதென்றும் பெண்மக்களுக்குக் கல்வி புகட்டாம லிருப்பது பெருங்கொடுமை யென்றும் ஒரு சீர்திருத்தக் கிளர்ச்சி யுண்டாயிற்று. அதுகாலை எத்தனை குழப்பங்கள் உண்டாயின! கண்டனக் கூட்டங்களும் மறுப்புக்களும் மூலைக்கு மூலை புறப்பட்டு வந்து எதிர்த்தன. பெண் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது வழக்கமில்லாத வழக்கம் என்று சொல்லி எத்தனையோ பொருத்தமற்ற போலி நியாயங்கள் சொல்லப்பட்டன. ஆனாலும், பெண் மக்களின் நற்காலமாகப் பெண்கல்வி, நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வரவர, இப்போது பெண் கல்வியைக் கண்டிப்பவர் இல்லா தொழிந்தனர்.

இனி, மங்கையர் மறுமணம் எனப்படும் கைம்பெண் கலியாணத்தைப் பற்றிய சீர்திருத்தப் பேச்சு சில வருடங்களுக்கு முன் பேசப்பட்டதாயினும், இப்பொழுது அதைப்பற்றி அதிகமாகப் பேசப்படுவதில்லை. ஆனால் இச் சீர்திருத்தம் அடியோடு நின்றுவிடவும் இல்லை. பஞ்சாப், கல்கத்தா முதலிய சிற்சில இடங்களில் "விடோ ஹோம்" எனப்படும் "கைம்பெண் கழகங்கள்" இச்சீர்திருத்தத்தை இழுத்துப் பறித்து நிற்கின்றன. நமது நாட்டில் கைம்பெண்கள் அதிகம் உளர். பாலிய விவாகம் என்னும் புராதன அனாசாரம் குடிகொண்டுள்ள நமது நாட்டில் கைம்பெண்களுக்குக் குறைவுண்டோ? மயிர் நரைத்து உடம்பு திரைத்துத் தண்டூன்றித் தள்ளாடி நடக்கும் தொண்டு கிழவன், மழலைச்சொல் மாறா மங்கையரை மணந்துகொள்ள நம் மூதாதையர் சட்டம் (ஆசாரம்) இடங்கொடுக்கிற தாயினும், சிறு வயதிற்றானே மங்கல மிழந்த மங்கையர் மறுமணஞ்செய்தல் அநாசாரமென்று நமது பழைய ஒழுக்கம் தடுத்து நிற்கின்றது. கைம்மை நோன்பை ஆதரிக்கு மிப் புராதன ஒழுக்கத்தினால் இக்காலத்துக் கைம்பெண்களுக் குண்டாகும் கொடுமைகளைச் சொல்லி முடியா. கைம்பெண்களுக்குக் கடிமணம் செய்யா திருப்பதனால் நேரிடும் அவமானங்களும், கற்பழிவும், நிந்தனையும், உயிர்க்கொலைகளும் அனந்தம். ஆகவே, கைம்மை நோன்பு என்னும் புராதன ஆசாரம், இக்

காலத்துத் துராசாரமாகி விட்டபடியால் அதையொழித்து, நன்மை பயக்கக்கூடிய "கைம்பெண் கலியாணம்" என்னும் நவீன ஆசாரத்தைக் கைக்கொள்ளுதல் அவசியமன்றோ?

இப்பொழுது நாடெங்கும் மும்முரமாகப் பேசப்படும் சீர்திருத்தங்கள் இரண்டு உள. அவை, "தீண்டாமை" யை யொழித்தல் ஜாதிபேத மின்றிக் கோயிலுக்குட் செல்லல் என்பனவாம். நமது நாட்டில் முதன் முதல் செய்யவேண்டிய சீர்திருத்தம் இவ்விரண்டுமே. பழைய வழக்கம் என்று சொல்லிப் புராணம் பேசும் சீர்திருத்த விரோதிகள், இவற்றையும் எதிர்த்து நிற்கிறார்கள். இவர்கள் "பழக்கம்" "வழக்கம்" என்று சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள். இச் சீர்திருத்தங்கள் செய்யப்படாம லிருப்பதினால், நமது நாட்டில் அமைதியின்மை, சண்டை சச்சரவுகள், ஒற்றுமை யின்மை பழி வாங்குதல் துவேஷம் மானபங்கம் முதலிய துன்பங்கள் அடிக்கடி உண்டாகிற தோடு நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டு நிற்கின்றது.

ஜாதிபேத மொழித்துத் தீண்டாமை தொலைந்து ஆலயஞ் செல்லு முரிமை அனைவருக்கு முண்டாகுமானால், மேற்சொல்லிய துன்பங்களெல்லா மொழிந்து அமைதியும் சகோதர பாவமும் ஒற்றுமையும் செழித்து நாடு முன்னேற்றமும் நாகரிகமு மடையுமன்றோ?

சில நாட்களுக்கு முன் தேவதாசிகளைத் திருக் கோயில்களில் வைப்பது கூடாதென்று ஒரு சீர் திருத்தம் ஒரு சபையில் கொண்டு வரப்பட்டது. இச்சீர் திருத்தம் நன்மை பயக்கக் கூடிய வொன்றே. இதனால் பல நன்மைகள் ஏற்படு மன்றோ? ஆனால், ஐயங்காரொருவர் எழுந்து முன் பின் யோசியாமல் நன்மை தீமைகளைக் கவனியாமல், "பழைய வழக்கம்" என்னும் காரணத்தைக்காட்டி, திருக்கோயில்களில் தேவதாசிகள் அவசியம் இருக்கவேண்டு மென்று வற்புறுத்திப் பேசி, சீர்திருத்தத்தைத் தாக்கினார். இச் சீர்திருத்தம் ஓட்டுக்கு விட்டபோது தோற்றுப் போயிற்று. இத்தகைய சீர் திருத்த விரோதிகள் நமது தேசத்தில் இருக்கும் வரை இந்திய சமுதாயத்தில் இடையூறுகளும் துன்பங்களும் இருக்கு மென்பதில் ஐய முளதோ!

தேவதாசிகள் நிந்தனையுள்ள தமது தீத்தொழிலை ஒழித்து நன்னெறியைக் கடைப்பிடிக்க வேண்டி ஒரு புதிய கிளர்ச்சியும் சென்னை முதலான இடங்களில் இப்போது தோன்றியுளது. சீர்திருத்த விரோதிகள், பழைய வழக்கத்தை விடக் கூடாதென்று சொல்லி எதிர்க்காம லிருப்பார்க ளென்பது எமது எண்ணம். மேலை நாட்டு ஐரோப்பியரும் அமெரிக்கரும் சீர் திருத்தப்படிகளையெல்லாம் ஏறிச் சென்று உன்னதத்தில் நிற்கிறார்கள். மூலையில் பதுங்கி இருந்த இடந்தெரியாமலிருந்த ஜப்பான், சீர் திருத்தத்தின் பயனால், இப்

போது நாகரிகம் வாய்ந்த வல்லரசுகளி லொன்றாகி மிளிர்கின்றது. அடிமைகளாகச் சென்று அமெரிக்காவில் குடியேறிய ஆபிரிக்கா தேசத்துக் காப்பிரியர் (நீக்ரோவர்) இப்போது சீர் திருத்தமடைந்து நாகரிக ஜாதியாக மாறி வெள்ளையர்களோடு சம உரிமை கேட்கின்றனர். குற்றவாளிகளாகி நாடு கடத்தப்பட்டு ஆஸ்ட்ரேலியா தேசத்தில் குடியேறிய ஆங்கிலேயரின் சந்ததியார் சீர்திருந்தி சுயராஜ்யம் பெற்றுச் சுகமா யிருக்கின்றனர். நெடுநாள் உறங்கிக்கிடந்த சீனர் உறக்கம் விழித்து எழுந்து சீர்திருத்தக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். நம் நாட்டு ரவீந்திரநாத தாகூரையும் அவர்கள் தமது நாட்டுக்கு அழைத்திருக்கிறார்கள். துருக்கியரும் மும்முரமாகச் சீர் திருத்தம் செய்யத் தலைப்பட்டு விட்டனர். பெண்கள் முக மூடியிட்டு "கோஷா"வாக விருந்து கொண்டு ஆண்களைக் காணக் கூடாதென்னும் அனாசாரவழக்கம் துருக்கியில் தொலைந்து விட்டது. இப்போது (கோஷா) துருக்கியப் பெண்கள் முகமூடியின்றித் தாராளமாகத் தெருக்களில் உலாவும் உரிமை பெற்றுவிட்டனர். இவ்வாறு சீர் திருத்தங்கள் நாடெங்கும் நடை பெறுகின்றன. துன்பமும் துயரமும் உண்டாகக் கூடிய பழைய வழக்கங்களால் தீமைகளே விளைகின்றன. தீமை பயக்கும் இப் பழைய வழக்கங்களைக் கைவிடக் கூடாதென்று சொல்லுவது மூடத்தன மல்லவா? அன்றியும்,

> "பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையினானே"

என்னும் நன்னூற் சூத்திரமும் ஈண்டு ஆராயற் பாலது.

நமது புதிய பிரசுரங்கள்.

	ரூ.	அ.
கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், அகத்திய பஞ்சகம் முதலியன	0	4
நடராஜப் பத்து	0	2
பழமொழித் திரட்டு	0	3
தாலாட்டுக் கோவை	0	3
எனது காங்கிரஸ் யாத்திரை	0	3
பங்கஜம்	0	2
குயில் மொழி	0	2
புண்ணிய பூமி	0	12

	ரூ.	அ.
வர்த்தக யுக்தி	0	12
பரிமளா	1	0
ஏரெழுபதும் திருக்கை வழக்கமும்	0	3
மணிவடக் களவு	0	4

மானேஜர்,
"லக்ஷ்மி"
சென்னை.

வேதப் பயிற்சி

ஆரிய சித்தாந்தம்

ஸ்ரீமான் த. ராமகிருஷ்ணன் எழுதியது.

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தார் யாவரும் கல்வி கற்றல் அவசியம். கல்வி யில்லாதான் விலங்குக்கு நிகர். கற்க வேண்டுவன அளவில. சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினர்க ளாகிய மக்கள் ஆராய்ந்து அமைவுடைய கற்றலே தகுதி. அத்தகைய கல்வியினால் இம்மையிலும் மறுமையிலும் உறுதிப் பயன்களைப் பெறுதல் வேண்டும். அவை மெய்ந்நூல்களையுங் கலைநூல்களையும் பயின்று, அவ்வழி யொழுகுவதனால் அடையத் தக்கன. மெய்யறிவையுங் கலையுணர்வையு மொருங்கே போதிப்பன வேதங்களே யாகும். வேதங்கள் பேரறிவும் பேராற்றலும் பெருங்கருணையும் படைத்த இறைவனால் மக்கட்பொருட்டு ஆக்கப் பெற்றிருக்கின்றன. அவை இருக்கு, எசுர், சாமம், அதர்வமென நால் வகைப்படும்.

வேதத்தின் வரலாறு.

தஸ்மாத் *யக்ஞாத் ஸர்வஹுத:
ரிச: ஸாமாநி ஜஞ்ஞிரெ
சந்தாகும்ஸி ஜஞ்ஞிரெ தஸ்மாத்
யஜுஸ் தஸ்மாத ஜாயத

யசுர் வேதம். 31-7.

"யாண்டும் பரந்து உண்மை யறிவானந்த வுருவினனாய் விளங்குகின்ற அவ்விறைவன் பானின்று யாவரும் போற்றற்குரிய இருக்கு, யசுர், சாமம், அதர்வ மென்னும் நான்மறைகளும் பிறந்தன."

முழுமுதற் பரம்பொருளாகிய விறைவன் பானின்று வேதங்கள் தோன்றியன வென்பதற்கு; இருக்கு, யசுர், அதர்வ மென்னும் மூன்று மறைகளிலும் பயிலப்படுகின்ற மேற்குறித்த மந்திரமொன்றே போதிய சான்றாகும். வேறு சில மந்திரங்களு முள.

---

* யக்ஞ மென்னும் மொழியை வேள்வி யென்று பொருள் கொள்ளுவர். ஈண்டு யக்ஞ மென்பது "யக்ஞோ வை விஷ்ணு:"; (சதபதம். 1-1-1-13) யக்ஞம்=விஷ்ணு. விஷ்ணு வென்பது, "இதம் விஷ்ணுர் விசக்ரமெ த்ரெதா நிததெ பதம்" (யசுர், 5-15) யாண்டும் நிறைந்து யாவற்றையும் படைத்துக் காக்கும் பரமேசுவரனொருவனே யாமென்பர்—(மகரிஷி தயாநந்த சரஸ்வதி சுவாமிகள்.)

வேதப் பயிற்சி

நிராகாரனாகிய விறைவன் பானின்று ஒலி வடிவின வாகிய வேதங்கள் எவ்வாறு பிறத்தல் கூடுமென் றுசங்கிப்பார்க்கு ; சராசரங்களாகிய இவ்வுலகனைத்தும் படைக்கு மாற்றலுடையா னொருவனுக்கு மிக வெளிதா மென விருக்க. உலகத்து இயற்கையாகப் பலவொலிகளு மெழுகின்றன. அவை வெற்றொலிகளாக மக்கட்குப் பயன ளிப்பனவன்று. மக்கள் ஏனைய பிறவிகளினின்றும் புத்தி மனது வாக்கு என்னுங் கரணங்களால் சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் மனதினா லொன்றைப் பாகுபடுத்தி யுணர்ந்து புத்தியினால் நிச்சயித்து வாக்கினால் வெளி யிடுகின்றனர். வேதங்கள் அவ்வாறு சிந்தித்து, நிச்சயித்து, வெளியிடத் தக்கனவாக விருக்கின்றன. சிற்றறிவினர்க ளாகிய மக்களுக்கு ஏனைய புவனங்களையும் போகங்களையும் படைத்துதவிய விறைவன் ; அவர்களறியாமை நீங்க அறிவுச் சுடர் கொளுத்த வேண்டுவது மின்றி யமையாதன. அதன் பொருட்டே வேதங்களை யருளியிருக்கின்றனன். வேதங்கள் பொருளோசை நிறைந்து காலத்தானு மிடத்தானும் வரையறுக்கப் படாது, கலைகள் யாவும் நிரப்பியனவாக விளங்குகின்றன வாதலால் ; நிராகாரனாகிய விறைவன் அம்மொழிகளை யேற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறுதவத்தக்க புத்தி, மனது, வாக்கென்னுங் கரணங்களாற் சிறந்த மக்கள் வாயிலாகத் தோற்று வித்தனன். மக்களே யவ்வாறு பொருளோசைகளைத் தோற்றுவித்தல் கூடாவோ வெனின் ; மக்கள் காலத்தானு மிடத்தானு வரையறை யுடையார்க ளாகி, பாசத்தாற் பிணிப்புண்டு, சிற்றறிவினையுஞ் சிறுதொழிலையு முடையார்க ளாதலாலேலா தென்க. இறைவனோ, யாவு முணர்ந்த முற்றறிவினனாகி, யாண்டும் நிறைந்து, அளவி லுயிர்த் தொகுதிகளையும், அண்டத் தொகுதிகளையும் படைத்து ; அவற்றின் குறைகளை பளிங்கினுள் விளங்குமா றுணர்ந்து வருகின்றா னாதலால், அவனொருவனே அறிவு கொளுத்தற் குரியனா மென்க. அவ்வறிவுத் தொகுதிகளாகிய வேதங்களைப் படைப்புக் காலங்கடோறும் வெளி விடுகின்றான். அவ்வாறு இவ்வுலகத்து மக்கட் டோன்றிய காலத்து ; அவருட் டூய்மை வாய்ந்து, ஆன்மக் காட்சியிற் சிறந்து விளங்கி, பிறர்க்குப் போதிக்கு மாற்றலுடையார்க ளாகிய அக்கினி, வாயு, ஆதித்தன், ஆங்கிரசு என்னும் நான்கு இருடிகளுள்ளத்தில் முறையே நான் மறைகளையும் முதற்கண் தோற்று வித்தனன். அவர்களது ஆன்மக் காட்சியிலுள்ளத்திற் றோற்றுவித்த நான்மறைகளையும் இயற்கை வனப்புடன் யதார்த்த வருணனையால் காயத்ரி, ஊஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருகதி, பங்க்தி, திருஷ்டுப், ஜகதி யென்ற எழுவகைச் சந்தசுக் (யாப்புக்) களால் இன்பம் பயக்கு மினிய வோசையுடன் பாடினர். அவ்வாறு அவர்கள் யாத்த செய்யுட்களைப் பல பக்கங்களிலுஞ் சென்று மக்கள் பலரு மோதிப் பயன்பெற உபதேசித்தனர். அவ்வுரைகளே வேதங்களாக இற்றை நாளும் நம்முன் நிலவுகின்றன. இதனை :—

யக்ஞேந வாச: பதவீய மாயந்
தா மந்வ விந்தந் ரிஷிஷு ப்ரவிஷ்டாம்

தாமா ப்ருத்யா வ்யதது: புருத்ரா
தாம் ஸப்தரேபா அபிஸம் நவந்தெ.

இருக்கு வேதம். 10-71-3.

"போற்றற்குரிய பரம் பொருளால் மக்கள் மொழிவதன் பொருட்டு வேத வுரைகள் அளிக்கப் பெற்றிருக்கின்றன. அம்மொழிகள் இருடிகளின் இருதயங்களில் முதன் முதலாகத் தோற்றுவிக்கப் பட்டன. அவ்வாறு தங்க ளுள்ளங்களில் இறைவனருளாற் கிளங் தெழுந்த வேதமொழிகளை ஏனைய மக்கட் பொருட்டுப் பல பக்கங் களிலுஞ் சென்றுபதேசித்தனர். அவர்க ளுள்ளங்களி னின்றெழுந்த மொழிகள் இயற்கையழகு பொருந்தி உண்மை யணிகளால் வருணிக்கப் பெற்ற எழுவகைச் சந்தசுகளுடன் சிறந்து விளங்கு கின்றன" என்னு முரைகளாலும்;

"அக்னேர்க் வேதோ வாயொ
யஜுர் வேத: ஸூர்யாத்
ஸாம வேத:"

சதபதப்ராஹ்மணம். 11-4-2-3.

"அதர்வாங்கிரஸ:"

ஷை 11-5-4-10.

"அக்கியினிடத்து இருக்குவேதம்; வாயுவினிடத்து யசுர் வேதம்; சூரியனிடத்துச் சாமவேதம்; ஆங்கிரசினிடத்து அதர்வ வேதங்களும் போதிக்கப் பெற்றன வென்னும் அகச்சான்று புறச் சான்றுகளாலுந் தெளியக் கிடக்கின்றன.

வேதங்கள் ஈசுவர காவ்யம்.

வேதங்கள் உலகிலுள்ள நூல்கள் யாவற்றுள்ளும் மிகத் தொன்மையன. இலக்கியங்களுட் டலைசிறந்தன. செவிக்கினிய வின்பம் விளைப்பன. சிந்தைக்கினிய களிப்பை யூட்டுவன. பரந்த பொருட்களைச் சுருங்கிய மொழிகளால் விளக்குவன. ஆழ்ந்து சிந்தித்தற்குரிய நுண்ணிய பொருளமைதி யுடையன. ஆன்மாநு பவங்களைப் போதிப்பன. உண்மைப் பொருளை அகக்காட்சியினு லடையச் செய்வன. என்று மழியா வின்ப வாழ்வை யெய்துவிப்பன. அளவிடவியலாப் படைப்பின் நியதிகளையும் அற்புதங் களையும் பகர்வன. அகன்று பரந்த பொருட்களின் தத்துவங்களை மிக வெளிதாக வுபதேசிப்பன. சிறந்த கற்பனைகளால் மிளிர்வன. அக வொழுக்கம் புற வொழுக்கங்களை யறைவன. பயின்றார்க்குப் பயின்றவை பழமையாய்த் தோன்றப் புதிய வுணர்ச்சிகளை

யெழுப்புவன. கற்பார்க்கிடையரு வின்பங்களை யளிப்பன. தெய்வ மணங்கமழும் ஈசுவர காவியமாகச் சிறந்து விளங்குகின்றன.

பச்ய தேவஸ்ய காவ்யம்
ந மமார ந ஜீர்யதி.

அதர்வ வேதம். 10-8-32.

"பரமேசுவரனது இந்தச் சிறந்த காவியங்களைப் பாருங்கள். யாவன் பார்க்கின்ருனே; அவன் இறப்பதில்லை; குறைவடைவ தில்லை." இன்ப வாழ் வெய்துகின்ரு னென்பது கருத்து.

திருவாசகம், திருக்கோவையார், திருக்குறள், இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், பத்துப் பாட்டு முதலிய நூல்களைப் பல காலும் பயின்று; அவற்றின் பொருள் நுட்பங் கண்டின்புறு வார்க்கு ஈசுவர காவியமாகிய வேதங்களின் சிறப்பை விரித்துக் கூறுவது மிகையாம். தமிழ் மக்கள் நடுநிலை திறம்பாது ஆராய்ச்சியிற் சிறந்த பாஷ்யங்களையும், மொழி பெயர்ப்புக்களையுங் கற்ருராய்தல் சிறந்த கடனும்.

வேதங்களின் பொருளுணர்தல் வேண்டும்.

வேதங்களுள், இருக்குவேதம் உலகப்பொருட்களையும் அவற் றினியல்புகளையும்; ஆன்ம மனே தத்துவங்களையும் பகர்வது. எசுர் வேதம் அப்பொருட்களி னியல்புணர்ந்தோன் வினை யியற்றுமாறு ணர்த்துவது. சாமவேதம் உலகவறிவுங் கருமவியல்பு முணர்ந் தோன் அகக்கரண விருத்தியினுல் இறைவனை வழிபடுமாறு போதிப் பது. அதர்வவேதம் புறக்கரண அகக்கரணத் தூய்மையுடன் கூடிய யோக நெறிகளையும், மெய்ப்பொருட் காட்சியி னியல்புகளை யும் விளக்குவது.

வேதங்களைப் பெரிதும் மதித்து, அவற்றின் பொருளை யுணராது, இனிய வோசையுடன் நெட்டுருப் போடுவதனுல் யாதும் பயன்பெற முடியா. ஒவ்வொரு மந்திரங்களையும் பதம், அந்வயம், சந்தி முத லியன பிரித்து இலக்கணக்குறிப்புடன் சம்பந்தா சம்பந்தங்களை யுணர்ந்து நன்ருக ஆராய்ந்து கற்றல் வேண்டும். பொருளை யுண ராது கற்றல் பொதி சுமந்து செல்லும் எருதுகள் போலவும்; பல கிளைகளையும், இலைகளையும், பழங்களையுந் தாங்கி உயர்ந்து நிற்கின்ற வலிய மரங்கள் போலவும் பயனிலவாய் முடியும். பொருளாராய்ந்து கற்பதினுல் இடையருவின்பமும், அறிவு வளர்ச்சியும், சீரிய வொழுக்கமும், பாப நிவர்த்தியும், வீடுபேறு முளவாம்.

ரிசொ அக்ஷரெ பரமெ வ்யோமந்
வஸ்மிந் தேவா அதிவிச்வே நிஷேது:

யஸ்தந்ந வேத கிம்ரிச கரிஷ்யதி
ய இத்தத் விதுஸ்த இமெ ஸமாஸதெ.

இருக்கு வேதம். 1-164-39.

"எதனிடத்து சகலதேவதைகள் அல்லது சமஸ்த நற்குணங்களும் நிறைந்திருக்கின்றனவோ ; அந்த 'ரிச' என்னும் உயர்வுடைய அழிவில்லாத எழுத்துக்களில் (வ்யோமந்=வி—ஓம்—அந்) பிரகிருதி—பரமாத்மன்—ஜீவான்மா—(பாசம்—பதி—பசு)வும் பொருந்தி யிருக்கின்றன. யாவன் இம்மொழிகளின் நுட்பங்களை யுணராதிருக்கின்றானோ ; அவன் வேதமந்திரங்களை யோதுவதால் பெறும் பயன் யாது? ஒன்றேனு மிலவாம். ஆதலால் யாவனொருவன் அம்மொழிகளின் தத்துவங்களை உண்மையாக உணர்கின்றானோ; அவனே மெய்யுணர் வுடையோனாகி நிலையான பேறடைகின்றான்."

எனவே, வேதங்களை அவற்றின் அங்கங்கள் உபாங்கங்களுடன் ஐயந்திரிபறப் பொருளாராய்ந்து தெளிவுறக் கற்றல்வேண்டு மென்பதாயிற்று.

ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றேபதி ; பசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளைகாண்—ஒன்றின்றால்
அக்கரங்க ளின்றாம், அகரவுயி ரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு.

மெய்கண்ட தேவர்.

வேதப்பயிற்சி யின்றியமையாமை.

இறைவன் வாய்மொழியாகிய வேதங்கள், நால்வர் வாயிலாகத் தோன்றி, அவற்றின் சிறப்பினால் நான்கு கூறுபடினும் அனைத்து மொன்றேயாம். யாங்ஙனமெனின்! சிரமுங் கைகளும் வயிறுங் கால்களு மொன்று பட்டதே யாக்கையாமாறு போலவும் ; ஆன்மாவும் மனதும் புத்தியுமுடலு மொன்று பட்டதே மனிதனுமாறு போலவு மென்க. மக்கட்கு புத்தி பிராணன் மனம் வாக்கென்னுங் கரணங்கள் நான்கும் ஏனைய கரணங்களினின்றுஞ் சிறப்புடையன. புறக்கரணங்களுள் வாக்கொன்றே விலங்கு பறவை முதலிய வுயிர்களினின்று வேறுபடுத்திக் காட்டுவது. ஒருவர் கருத்தைப் பிறர்க்குணர்த்தற் கேதுவாயிருப்பது. அகக்கரணங்களுள் மனதொன்றே நன்று தீது ; பொய்மை மெய்மை ; உள்பொருள் இல்பொரு ளாதியவற்றைப் பாகுபடுத்தி யுணர்த்துவது. உயிர்கள் யாவும் உடம்பினில் நிலைத்து நிற்பதற்குப் பிராணனொன்றே யாதாரமாயிருப்பது. புத்தியொன்றே ஆன்மாவின் உண்மை நிலையை விளக்கிக் காட்டுவது.

எனவே, ஆன்ம விகாசத்திற்குப் புத்தி வளர்ச்சியும் ; பிறவிப் பயனை யெய்தற்கு நீண்ட ஆயுளும் பிணியில் யாக்கையும் பெற்றிடப்

பிராணசக்தியும் ; நல்வினை தீவினையாதியவற்றைப் பகுத்தாராய்ந்து செய்தற்கு மனோசுத்தியும் ; தாங்கண்டின்புறுஞ் செயல்களைப் பிறர்க்கறிவுறுத்திப் பேருதவி புரிந்து, அந்நியோன்னிய சமத்துவமும், ஒற்றுமையும், நட்புரிமையும் வளர்ப்பதற்கு வாக்கு வல்லமையும் மக்கட் கின்றியமையாது வேண்டப் படுகின்றன. வாக்கு வளர்ச்சியின் பொருட்டு அறிவுரைகளடங்கியன, இருக்கெனவும் ; மனோசுத்தியின் பொருட்டு நற்கருமங்களை யுபதேசிப்பன, எசுரெனவும் ; பிராணசத்தியின் பொருட்டு மனோலயாதிகளைப் போதிப்பன, சாமமெனவும் ; ஆன்ம விகாசத்தின் பொருட்டு மோகாதிகளை யுணர்த்துவன, அதர்வ மெனவும் நால் வகையாகப் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ரிசம் வாசம் ப்ரபத்யே
மனோ யஜு: ப்ரபத்யே
ஸாம ப்ராணம் ப்ரபத்யே
சக்ஷு: ச்ரோத்ரம் ப்ரபத்யே.

யசுர்வேதம். 36-1

"எனது வாக்கு வல்லமையின் பொருட்டு இருக்கு வேதத்திற்கு வணக்கம் ; எனது மனோ சுத்தியின் பொருட்டு யசுர் வேதத்திற்கு வணக்கம் ; எனது பிராண சக்தியின் பொருட்டு சாம வேதத்திற்கு வணக்கம் ; எனது சிரவண சக்தியின் பொருட்டு திவ்விய ஞான திருஷ்டி என்னும் அதர்வ வேதத்திற்கு வணக்கம்."

மக்களிடத்துச் சிறப்பு வகையாய் விளங்குகின்ற நால்வகைக் கரணங்களையும் அபிவிருத்தி செய்வதற்காக நான்மறைகளையும் வகுத்துள்ளான். இந்நால்வகைக் கரணங்களையும் படைத்த மக்கள் யாவரும் வேதங்களைக் கற்றல் கடமையாம். இறைவ னாணையுமாம். அன்றியும் மக்களுணர்ந்து கொள்ள வேண்டிய கலைகள் யாவும் நிரம்பியன. அவற்றை யொருங்கே யுணர்ந்தா னொருவனே பிறர்க் கறநெறியை யுபதேசிக்கு மாற்றலுடையா னாகின்றான்.

வித்யாச்ச வா அவித்யாச்ச
யச் சாங்ய துப தேச்யம்
சரீரம் ப்ரஹ்ம ப்ரா விசத்
ரிச: ஸமா தொ யஜு:

அதர்வம். 11-8-23.

"மெய்ந்நூல்களையுங் (வித்தை) கலைநூல்களையும் (அவித்தை) உபதேசிக்கின்றவனது யாக்கையில், அதர்வம் (ப்ரஹ்ம), இருக்கு, சாமம், யசுர் வேதங்கள் இடம் பெற்றிருத்தல் வேண்டும்."

எனவே, ஒவ்வொருவரும் வேதங்களைக் கற்க முயன்று, வைதீக தர்மத்தைக் காப்பாற்றி, இந்தியா தன் புராதன நிலையை படையுமாறு செய்தல் இந்துக்களின் கடனும்.

யாவர்க்கு மாகுமென்பது.

வேதங்கள் இறைவன் வாய்மொழி. இருடிகள் வாயிலாக மக்களுக்கு வெளியிடப் பட்டன. எப்பொருளு மடங்கிய ஈசுவர காவியம். தங்கள் வளர்ச்சியின் பொருட்டு மக்கள் யாவரும் கற்கவேண்டுவது. வேதங்களை யுணர்ந்தவர்கள் அறிஞர்களாக மதிக்கத் தக்கவர்களென்றும் மேலே விளக்கிக்காட்டினும், இதனை யுணராது சிலர் ‘ ஸ்திரி ஸூத்ரௌ நாதியா தாமிதி ச்ருதெள ’ பெண் மக்களும் சூத்திரர்களும் வேதங்களைக் கற்கலாகாவென்று பொய்ப் பிரமாணங் காட்டி வாதிக்கின்றனர். சூத்திரரொழிய க்ஷத்திரியரும் வைசியரும் இக்காலத்திலில்லை யென்று கூறி விடுகின்றனர். என்னே இவர்களறியாமை யிருந்தவாறு! ஐரோப்பியர் வேதங்களை யுணரலாம், தங்கள் மொழிகளில் பெயர்த்தெழுதலாம், தாங்க ளுணர்ந்தவாறும் பிழைபடவு மச்சியற்றி விடலாம். ஏனைய வுரிமைகளையு மனுபவிக்கலாம். ஆனால் தங்கள் சொந்த சகோதரர்களாகிய இந்துக்களுள் பலர் வேதங்களைக் கற்றல் கூடா. ஏனைய வுரிமைகளை யநுபவித்தல் கூடா. இவ்வறியாமை என்றகலும்? வேதங்களவ்வாறு விதிக்கின்றனவோ? வேதநெறி பிழைத்த இவ்வுரைகளன்றோ இந்தியாவினெழுச்சிக்குத் தடையாயவை. அறிஞர்களே! ஆராய்ந்து பாருங்கள். இறைவன் படைத்த ஏனைய பொருட்களெல்லாம் மக்களுக்குப் பொதுவா மாறு போல ;இறைவன் வாய் மொழியாகிய தேவங்களேன் பொதுவாக மாட்டா? இஃது இறைவனாணையை மீறிய வுரைகளே யாகும்.

யதெமாம் வாசம் கல்யாணி
மாவதாநி ஜநெப்ய:
ப்ரஹ்ம ராஜந்யா ப்யசூம் சூத்ராய
சார்யாய ச ஸ்வாய சாரணய
ப்ரியொ தேஹாநாம் தக்ஷிணயை
தா துரிஹ பூயாஸமயம் மெ காம:
ஸம்ருத்ய தாமுப மாதொ நமது.

யசுர் வேதம். 26-2.

“ ப்ராஹ்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இவர்களது மனைவியர், ஏவலாளர், நன்னிலை விரும்பும் தாழ்ந்தவர்களுமாகிய யாவர்களுக்கு மாகவே இடையறு வின்பங்களை யளித்தற்குரிய நான்கு வேதரூபமான இம்மொழிகளை யுபதேசிக்கின்றேன். நான்

எவ்வாறு உபதேசிக்கின்றேனே; அவ்வாறே புலவர்கள் பிறருக்குப் போதித்தல் வேண்டும். அதுவே அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவது. ஈண்டு எனது விருப்பம் இனிது பெருகுக. இதனை யுணர்ந்து எனது பரகதியை அடையுங்கள், அடையச் செய்யுங்கள்."

இவ்வுரைகளைச் சிந்தியுங்கள். அறிவு நூற்கள் யாவர்க்கும் பொது. தமிழ் வேதமாகிய திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு நிலவுகின்றன. வேதங்களொழிந்த உபநிடதங்கள் முதலியன யாவராலும் படிக்கப்படுகின்றன. வேதங்கள் ஏன் பொது நூலாகக் கற்றல் கூடாது? வட இந்தியாவில் பொதுவாகக் கற்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. வேத தத்துவவுரை நூற்கள் பலவும் வெளிவருகின்றன. தமிழகத்தார் இதனைச் சிந்திக்க.

எனவே, இச்சிறிய கட்டுரையில் அகச்சான்றுகளாகிய வேதவுரைகளையே மிகுதியும் விளக்கினும். வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவன் கண்ட முதநூலாகிய வேத மொழிகள் மக்கட்கின்றியமையாது கற்கவேண்டுவன. மக்களனைவருக்கும் தங்கள் நித்திய கடன்களிலொன்முக வேதங்களைக் கற்றலுங் கற்பித்தலுங் கேட்டலுங் கேட்பித்தலு மின்றியமையாத சிறந்த கடமைகளாக விளங்குகின்றன. ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நண்பரே!

இரண்டாவது வருஷம் பிறந்துவிட்டது. லக்ஷ்மிக்கு இரண்டு சந்தாதார்களைச் சேர்த்தனுப்பி எமக்கு ஊக்கமளிக்க வேண்டுகின்றோம்.

மானேஜர்,

லக்ஷ்மி.

"Our Secret Foes and Fight for Health."

"நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

ஸ்ரீமாந் எ. சோக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.

(காபி ரைட்)

(541-வது பக்கத் தொடர்ச்சி.)

அவை பெருகி வளரும் போது கட்டியாகின்றது. தோலுக்குள்ளே அநேக துவாரங்களோடும் கட்டியைப் பார்க்கிலும் பெரிதாகவும் வளர்ந்தால் இராஜப்பிளவை (Carbuncle) என்று சொல்லப்படும். பெரிதும் அகன்று பரவி வளர்ந்தால் கரப்பான் (Erysipelas) என்று சொல்லப்படும். சீழையுண்டாக்குங் கிருமிகள் காயத்திற்குள் புகும்போது அவை சிறிது சீழை மாத்திரம் உண்டாக்கலாம். ஆனால், சில வேளை அவை பொறுக்கமுடியாத அழற்சியை யுண்டாக்கலாம். சில வேளை அவை ஆறாதபுண்ணையுண்டாக்கலாம். சில வேளை அவை ஒருவன் உடம்பெங்கும் பரவி அவனுடைய இரத்தத்தை நஞ்சாக்கி (blood poison) அவனை இறக்கச் செய்யலாம். சீழையுண்டாக்குஞ் சில வகைக் கிருமிகள் மிக்க அபாயத்தை விளைவிக்கக் கூடியனவாம். இன்னுஞ் சில வகைக்கிருமிகள் அற்ப தீங்கே செய்வனவாம்; ஆதலால், காயங்களுள்ளே எவ்வித கிருமி புகுவதும் கேட்டுக்கே யிடமாகும்.

காயங்களைச்சுத்தமாக வைத்தல்.

காயங்களில் கிருமிகள் புகாதபடி அவற்றைப் பார்த்துக் கொள்ளவேண்டும். காயத்தைச் சுத்தஞ் செய்யும் போதும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தால் அக்காயத்தை யெதனாலும் மூடிவிடக் கூடாது. காயத்தில் ஏதோ சில கிருமிகள் புகுந்தாலும் இரத்தம் வடிந்து கொண்டிருப்பதால் அவற்றை வெளியே தள்ளிவிடவாவது, அல்லது கொன்று விடவாவது கூடும். காயத்தைச் சுத்தமும் மெல்லியதுமான துணியாற் சுற்றிக் கட்டவேண்டும். துணி சுற்றுவதற்கு முன்னம் அத்துணி சுத்தமானதென்று உனக்கு நிச்சயப்படவேண்டும். சுத்தமான துணி கிடைக்காவிட்டால் ஒரு சுத்தமான காகிதத்துண்டால் காயத்தை மூடி அதன்மேல் துணியைச் சுற்றவேண்டும். காயம் ஆறும் வரையும் துணியை யெடுக்கக் கூடாது. பிறகு கிருமிகள் காயத்தினுள்ளே புகாவென்பது உனக்கு நிச்சயமாகும். இம்மெல்லிய துணியின்மேல் இன்னொரு துணியைச் சுற்ற வேண்டும். இவ்விரண்டாவது துணி

கறைபட்டு அழுக்காய் விட்டால் அதனை மாற்றி விடலாம். கையிலும் பாதங்களிலும் இன்னும் மற்ற இடங்களிலும் அற்ப காயம் பட்டாலும் அதனைத் துணிசுற்றி மூடி வைப்பது மிகவும் நல்லதாகும். ஏனெனின், சீழ்பிடிக்கச் செய்யுங் கிருமிகள் மண்தூசிலும் அழுக்கிலு மிருப்பதினால் அத்தூசும் அழுக்கும் கைகளிலும் பாதங்களிலும் மற்ற இடங்களிலும் படக்கூடும்.

அழுக்குப் படிந்திருக்குங் காயங்களைச் சுத்தமாக வைத்தல்.

அழுக்குப் படிந்திருக்கும் எந்தப் பொருளாலாகிலும் காயமுண்டாகின்றது. அதனாலே, காயத்தில் சிறிது அழுக்கும் மண்ணுஞ் சேர்ந்துவிடலாம்; ஆகையால், காயத்திற்குப் பாளங்கட்டுவதற்கு (bandage) முன் அதனைச் சுத்தமாய்க் கழுவ வேண்டும். காயங்களைக் கழுவுதற்குச் சுத்தமான நீரையே உபயோகிக்க வேண்டும். இதற்குச் சூடான உப்புநீர் நல்லதாகும். காயத்தைக் கழுவுதற்குக் கொதிதண்ணீரை உபயோகிப்பது மிகவும் நல்லதாகும்; ஏனெனின், நீரைச் சூடாக்கும்போது கொதிநீரிலுள்ள கிருமிகளெல்லாஞ் செத்துப் போகின்றன. காயத்தில் மிக்க அழுக்கிருந்தால் அதனைக் கழுவுதற்கு மெல்லியதும் சுத்தமுமான துணியும் சோப்பும் உதவியா யிருக்கும். காயத்தைக் கழுவி சுத்தஞ் செய்தபின் அதற்குத் துணி சுற்றுவதன் முன்னே நோயணுப்போக்கு மருந்தை *(Mild disinfectant) அதன்மேல் உபயோகிப்பது நல்லதாகும்.

சீழுள்ள காயங்களைச் சுத்தஞ் செய்தல்.

காயத்தில் சீழ்பிடித்திருந்தால் அதனுள் கிருமிகள் வளருகின்றனவென்று நாம் தெரிந்து கொள்ளுகிறோம்; ஆகையால், கட்டியிருக்குந் துணிப்பாளத்தை யெடுத்துவிட்டுக் காயத்தைச் சுத்தஞ் செய்தல் வேண்டும். காயத்திலிருந்து எடுத்த சீழை, கிருமிகள் காணப்படாத காயத்தின் எந்தப் பாகத்திலேனும் படும்படி விடக்கூடாது; அன்றியும், உடம்பின்மேல் சிதறவிடவுங் கூடாது; ஏனெனின், அச்சீழில் இலக்ஷக் கணக்கான கிருமிகளிருக்கின்றன.

---

* நோயணுப்போக்கு மருந்து (disinfectant)—காற்றிலும், நீரிலும், தரையிலும் மற்ற இடங்களிலுமுள்ள நோயணுக்களை நாசமாக்கித் தீர்க்கந்தத்தை மாற்றும் பொருளாகும். போராசிக் அமிலம் (Boric acid), கார்பாலிக் அமிலம் (Carbolic acid) முதலியவை.

காயத்தைச் சூடான உப்பு நீரைக்கொண்டாகிலும் அல்லது போராசிக் அமிலம், நீர் கலந்து சாரங்குறைந்த கார்பாலிக் அமிலம் இவ்விரண்டிலொரு கலவை நீரால் கழுவ வேண்டும். காயத்தைச் சுத்தஞ்செய்து மறுபடியும் பாளங் கட்டவேண்டும். அப்பாளத்தை (bandage) போராசிக் அமிலம் அல்லது நீர்கலந்து சாரங்குறைந்த கார்பாலிக் அமிலக்கலவை நீரால் நனைக்க வேண்டும். போராசிக் அமிலம் அல்லது சிறிது கார்பாலிக் அமிலங் கலந்த தைலம் அற்ப காயங்களுக்கும் புண்களுக்கும் பிரயோகிப்ப தற்கு உபயோக மாகும்.

கட்டிகளுக்கும் சிலந்திகளுக்கும் பிரயோகம்.

(Treating boils and abscess). துணியை வெந்நீரில் தோய்த்து ஒற்றடங் கொடுத்தும் அல்லது சூடான மாக்களி (poultis) கட்டுவதும் கட்டியிலுண்டாகும் வலியைக் குறைப்பதற்கு உதவியாகும். அன்றியும், கட்டியைச் சத்திரஞ் செய்யக்கூடுமான நிலைமைக்கு அவை அக்கட்டியைச் சீக்கிரமாய்ப் பழுக்கவைக்கும். கட்டியைச் சுற்றியிருக்குந் தோல் மிருதுவாகும்படிக்கு அதிக நாளைக்கு மாக்களியைக் கட்டிவைத்தல் கூடாது. அவ்வாறு கட்டிவைப்பதால் கிருமிகள் மிருதுவான தோலுக்குள் புகுந்து புதிய கட்டிகளைப் புறப்படச் செய்யும். கட்டி அல்லது சிலந்தி மிருதுவாயும் சீழ்பிடித்து மிருந்தால் அதனைச் சத்திரஞ் செய்து சுத்தப் படுத்திவிட வேண்டும். இவ்வாறு செய்யா விட்டால் உடம்பின் மற்றப் பாகங்களுக்கு அழற்சி பரவிவிடும்.

சீழையுண்டாக்குங் கிருமிகள் பரவாதபடி கவனித்தல்.

சீழிலுள்ள கிருமிகள் பெரும்பான்மையும் உரமானவையாயும் அபாயத்துக் கிடமானவை யாயு மிருக்கின்றன. அவை பரவாதிருக்கும்படி நாம் மிகவுங் கவனித்தல் வேண்டும். சீழுள்ள கட்டி, புண், காயம் இவற்றின்மேல் ஈக்கள் நடக்க விடக் கூடாது; ஏனெனில் ஒரு ஈ தன் கால்களிலிருந்து ஆயிரக் கணக்கான கிருமிகளைக் கொண்டு போகக் கூடும். புண்ணிலிருந்து அல்லது கட்டியிலிருந்து எடுத்த துணிப்பாளங்களில் கிருமிகள் நிறைந்திருப்பதால் அவற்றை எரித்துவிட வேண்டும். சீழைக் காகிதத்தினுலாகிலும் அல்லது துணியினு லாகிலும் ஒற்றிப் பிடித்துக் கொண்டு

உடனே எரித்துவிட வேண்டும். கட்டியைச் சத்திரஞ் செய்வதற்கு உபயோகப் படுத்திய கத்தியை, அதன் மேலுள்ள கிருமிகளைக் கொல்வதற்குக் கொதி நீரிற் போடவேண்டும். காயம் அல்லது புண்ணைக் கழுவி சுத்தஞ் செய்து மருந்திட்டுக் கட்டினவர், தமது வேலை முடிந்ததும் உடனே கைகளைச் சோப்பு கொண்டு வெந் நீரிற் கழுவ வேண்டும். கிடைக்கக் கூடுமானால் சில நிமிஷ நேரம் தமது கைகளைக் கிருமிகளைக் கொல்லும் மருந்தில் (disinfectant) கழுவலாம். இல்லாவிடின் சீழி லிருக்குங் கிருமிகள் அவருடம்பின் தோலினுள் புகுந்து அவருடம்பிலே கட்டி காணச் செய்யலாம். சில வேளை ஒரு கட்டியை யுடைய ஒருவன் அவனுடைய உடம்பிலே யே இன்னுஞ் சில கட்டிகள் உண்டாகும்படி செய்து கொள்ளலாம். அவர் செம்மையாகக் கைகளைக் கழுவாவிட் டால் அவருடைய நகங்களில் கிருமிகளொட்டிக்கொண்டி ருக்கும். பிறகு உடம்பில் எங்கேனும் நகங்கீறிக்கொண் டால், கீறிக்கொண்ட தோலின் வழியாய்க் கிருமிகள் புகுந்து கட்டிக ளுண்டாகும்.

கண்ணோய்.

சில வேளை கண்ணோய் சீழை யுண்டாக்குங் கிருமிகளா லுண்டாகின்றது. கண்ணோய் மிகவுந் தொற்றிக் கொள்ளுந் தன்மை யுள்ளது. கண்ணோ யுடையவர்கள் உபயோகிக்கும் கைக்குட்டைகள், மேலே போட்டுக் கொள்ளுந் துண்டுகள் முதலியவற்றில் கிருமிகள் முக்கியமா யிருக்கின்றன; ஆத லால், சௌக்கியமா யிருப்பவர்கள் அவற்றை உபயோகித் தல் கூடாது. ஈக்கள் கிருமிகளை ஒருவரிடமிருந்து மற் றொருவருக்குக் கொண்டுபோகுந் தன்மை யுடையன. உன் னுடைய கைகள் உன்னுடைய கண்களில் படாதபடி பார்த் துக்கொள், ஏனெனில், உன் கைகளின்மேல் கிருமிக ளிருக்கின்றன. கண்ணோயுடைய பிள்ளையின் புத்தகங் களை அல்லது பென்சில்களை நீ உபயோகித்தல் கூடாது. போராசிக் அமிலங்கரைத்த நீர் கண்களுக்கு நல்ல கழுவு நீராகும் (good wash). கண்ணோ யிருக்கும் போது மேற் சொன்ன நீரை ஒரு நாளைக்கொருதரம் அல்லது இரண்டு தரம் கண்களில் துளியாக விடலாம். கண்களிலுள்ள கிருமிகளைக் கொல்வதற்கு அது உதவியா யிருக்கும்.

(இன்னும் வரும்.)

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

ஸ்ரீமான் பாதுர், வே. ராஜகோபாலாச்சாரியார் எழுதியது.

விவசாயப் பண்ணையின் சாகுபடித் திட்டமும் சில உள்ளம்சங்களும்.

(சகல உரிமைகளும் ஆசிரியருக்கே.)

"மூன்று ஏக்கர் நிலமும் ஒரு பசுவும் எனக்கு இருந்தால் நான் ஒரு ஸ்வதந்திர புருஷன்." இது அயர்லாந்தில் இன்றும் வழங்கி வரும் ஒரு விவசாயப் பழமொழி. அயர்லாந்தில் ஒரு குடும்பத்திற்கு 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு விவசாயப் பண்ணையும், ஒரு பசுவும் இருக்குமாயின் அக்குடும்பம் மிகவும் கண்ணியத்துடன் காலத்தைக் கழித்து வருகிறது. அரசாங்க உத்தியோகங்களில் ஒன்றிலமர்ந்து சேவை செய்வதினால் அடையும் வருமானத்தைவிட மிகவும் அதிகமாகவே இம்மூன்று ஏக்கர் பண்ணையை வைத்தாலும் அயர்லாந்தின் ஒவ்வொரு சாதாரண கிருஷிகனும் சம்பாதித்து விடுகிறான். சாதாரண வியாபாரியும், கைத்தொழிலில் ஈடுபட்டுழைப்பவரும் தனித்தனியே அடையும் லாபத்தைவிட அதிகமாகவே அயர்லாந்தின் சாதாரண குடியானவன் தன்னுடைய பண்ணையிலிருந்து எடுத்துவிடுகிறான். தனக்குத் தேவையான பொருள்கள் எல்லாவற்றையும் இம்மூன்று ஏக்கர் பண்ணையிலிருந்தும், தன்னுடைய பசுவின் மூலமாகவும் உற்பத்தி செய்து விடுகிறான். எதிர் காலத்தில் நேரக்கூடிய எதிர்பாராத செலவு களுக்காகவும் ஒரு க்ஷேம நிதியையும் இப்பண்ணை யிலிருந்து எடுத்து ஒதுக்கி வைத்து விடுகிறான்.

பகவானுடைய கடாக்ஷத்தையும், தயவையும் எதிர்பார்த்து அயர்லாந்தின் கிருஷிகன் தனது தினசரி வாழ்க்கையை நடத்துகிறானே தவிர, வேறு ஒருவருடைய கைகளையும், தாக்ஷண்யத்தையும் கோரி நிற்கின்றானில்லை. உழைப்பும், ஊக்கமும், மனோதிருப்தியும், லக்ஷ்மியின் கடாக்ஷமும் பரிபூரணமாக ஜ்வலிக்கும் இத்தகைய கிருஷிகனது வாழ்க்கையில்தான் பகவானுக்கு மகத்தான திருப்தி யிருக்கிறது. பகவானுடைய அருளுக்கும், அன்புக்கும் பாத்திரமான ஒருவன் ஸ்வதந்திர புருஷனாக நிலவாமல் அடிமை வாழ்க்கையை எவ்வாறு நடத்த முடியும்?

உண்மையாக அயர்லாந்து தேசத்துக் கிருஷிகர்கள், தனித்தனியே வாழ்க்கை சுயராஜ்யத்தை அடைந்து விட்டார்கள். அமெரிக்கா கண்டத்துக் கிருஷிகர்களும் தனிப்பட்ட வாழ்க்கை சுயராஜ்யத்தைப் பெற்று இருக்கிறார்கள். விவசாய தேசமென்று சொல்லக் கூடாத பல நாடுகளிலுள்ள கிருஷிகர்களும், ஏனையோரும் வாழ்க்கை

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

சுதந்திரத்தைப் பெற்று பின்பே தேசீய சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறார்கள். தனிப்பட்ட சுதந்திரத்தை (Individual Liberty) நாட்டிலுள்ள பெரும்பான்மையோர் முதலில் அடைந்தால் தான் தேசீய சுயராஜ்யத்தையோ அல்லது தேசீய சுதந்தரத்தையோ (National Swaraj or National Liberty) அடைய ஒரு நாடு பாத்திர மாகும்.

இந்திய தேசம் சுயராஜ்யத்தை அடைவதற்கு, இந்தியாவிலுள்ள பெரும்பான்மையோர் தனித்தனியே வாழ்க்கை சுதந்திரத்தையோ அல்லது வாழ்க்கை சுயராஜ்யத்தையோ (Individual Liberty or Individual Swaraj) பெற்று தான் ஆகவேண்டும். இத்தகைய தனிப்பட்ட வாழ்க்கை சுதந்திரம் அமையப்பெறாத அடிமைகளைப் பெரும்பான்மையாக உட்கொண்ட அடிமைகளின் நாடு, சுயராஜ்யத்தையாவது, அல்லது சுதந்திரத்தையாவது அடைய யோக்கியதை இருக்கிறதா?

பாரதியார் கூறியபடி,

"தொண்டு செய்யு மடிமை—உனக்கு
சுதந்திர நினை வோடா
பண்டு கண்டதுண்டோ—அதற்கு
பாத்திரமா வாயோ?
....
....
பிச்சைவாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ?"

என்று, தனிப்பட்ட சுதந்தரத்தைப் பிரதமத்தில் பெற்று அதற்கப்பால் தேசீய சுதந்திரத்தைப்பெற்ற மேல்நாட்டுக் கிருஷிகர்களும், ஏனையோரும், நம்மைக் கேட்பினும் தவறு ஒன்றுமில்லையே. எனவே ஒவ்வொரு இந்தியனும் தனிப்பட்ட சுயராஜ்யத்தை அடைவதற்கு வேண்டிய பகீரதப் பிரயத்தனங்களை உடனே செய்து தீரவேண்டும். நமது நாடு தேசீய பாதத்தில் முன்னுக்கு வரவேண்டுமானால் உடனே ஒவ்வொரு இந்தியனும் தனிப்பட்ட சுயராஜ்யத்தை அடையவேண்டிய முயற்சியில் ஈடுபட வேண்டும்.

பிறநாட்டு "மெல்லின்ஸ புட்டி"களுக்கும், "ஹார்லிக்ஸ் மால்டட் மில்க்கு"க்கும், "மில்க்மெயிட் பிரான்டு கண்டென்ஸ்டு மில்க்கு"க்கும், "ஹண்டிலி பால்மர் பிஸ்கோத்து"க்கும், என்றும் நிரந்தர அடிமைகளாக இருக்கும்படி நமது பாரத இளங்குருத்துக்களை நாம் பிடிவாதமாகப் பாழாக்கிக் கொண்டு வரும்போது தேசீய வாழ்க்கையில் சுதந்தரத்தையோ அல்லது சுயராஜ்யத்தையோ பிறரைத் தரும்படி நாம் கேட்பதில் நியாய மிருக்கிறதா? தனக்கு வேண்டியவற்றைத் தான் உற்பத்தி செய்துக்கொள்ள முடியாத பேடிகளின் கைகளில் சுயராஜ்யம் என்னபாடு படும்?

லக்ஷ்மி

தனிப்பட்ட சுதந்திர வாழ்க்கையை நடத்துவதற்கு எவ்வளவு நிலம் வேண்டுமென்பதைப் பற்றி முந்தின அத்தியாயத்தில் விவரித்திருக்கிறேன். நிலத்தின் இயற்கை அமைப்பு, நிலத்தின் பாகுபாடு, காலதேச வர்த்தமானங்கள், இந்திய மனித சுபாவங்கள் முதலியவற்றை ஒருங்கே சீர்தூக்கிப் பார்த்துவிட்டு, ஒரு குடும்பம், வாழ்க்கை சுதந்திரத்தைப் பெறுவதற்கு 5 ஏக்கர் பரப்புள்ள விவசாயப் பண்ணையைச் செவ்வனே வைத்தாண்டால் போதுமான தென்று ஒருவாறு முடிவு கட்டியிருக்கிறேன். இவ்வைந்து ஏக்கர் பண்ணையின் சாகுபடி திட்டத்தையும், சில உள்ளம்சங்களையும் ஈண்டு குறிப்பிடுகிறேன்.

ஐந்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் நமக்கிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். ஐந்து ஏக்கர் நிலத்தோடு, ஐந்து ஏக்கர் பூமியைப் பயிர் செய்வதற்குத் தேவையான உபகரணங்களும் நம்மிடத்தில் இருப்பதாகவும் இப்பொழுது வைத்துக்கொள்ளுவோம். ஐந்து ஏக்கர் பண்ணைக்குத் தேவையான விவசாயக் கருவிகளைப் பற்றியும் இதர தளவாட சாமான்களைப் பற்றியும் மற்றொரு அத்தியாயத்தில் விவரிக்கப்படும். இப்பொழுது ஐந்து ஏக்கர் சாதாரண நிலமிருப்பதாகவும் இதைச் செவ்வனே கிருஷி செய்வதற்குத் தேவையான கருவிகள், சாதனங்கள் முதலிய எல்லாம் நமக்குப் பரிபூரணமாக அமையப் பெற்றிருப்பதாகவுமே வைத்துக் கொள்ளுவோம். இந்த ஐந்து ஏக்கர் பண்ணையில் எவ்வெவ்வளவு விஸ்தீரணத்தில் எந்தெந்த பயிரை இடவேண்டுமென்ற கேள்விக்கு மாத்திரம் இப்பொழுது பதில் கூறுகிறேன்.

ஒரு பண்ணையில் சாகுபடி செய்யவேண்டிய பயிர் வகைகளைப் பற்றியும், அவைகளில் ஒவ்வொன்றையும் சாகுபடி செய்யவேண்டிய விஸ்தீரணத்தைப் பற்றியும் நிர்த்தாரணம் செய்வது சுலபமான காரியமல்ல. மிகுந்த அனுபவம் வாய்ந்தவனும், அபார முன்னோக்கமுள்ளவனுமான ஒரு கிருஷிகன்தான் இப்பிரச்னையை சரிவர சீர்தூக்கிப் பார்க்கமுடியும். முதலில் குடும்பத்தின் தேவைகளையும் குடும்பத்தின் வரவுசெலவு திட்டத்தையும் கவனிக்கவேண்டும். மாசூல்களின் விலை விவரங்களையும் கவனிக்கவேண்டும். எந்தப் பயிரைச் சாகுபடிசெய்தால் நிலத்தின் உரசத்து அப்புறப்பட்டுப் போகாதென்று உன்னிப் பார்க்கவேண்டும். கிருஷியை நடத்துவதற்கு நம்மிட மிருக்கும் மூலதனத்தைக் கொண்டு எந்தெந்தப் பயிர்களிடலா மென்று கவனிக்கவேண்டும். நமது ஐந்து ஏக்கர் பண்ணையின் நீர் வள வசதி, வடிகால் வசதி, நிலத்திலுள்ள உரத்தின் இயற்கை அமைப்பின் பாகுபாடு, முதலியவைகள், நாம் இட எண்ணியிருக்கும் பயிர்களுக்குப் பொருத்தமா யிருக்கின்றனவா வென்று அறிந்து கொள்ளவும் வேண்டும். விவசாயம் நடத்துவதற்குத் தேவையான கூலியாட்கள் கிடைக்கும் தன்மையைப் பண்ணை அமையப் பெற்றிருக்கும் பிரதேசத்தில் விசாரித்து அறிந்து கொள்ளவும் வேண்டும்.

இவைகளைப் பற்றின சில உதாரணங்களை இங்கு குறிப்பிட வேண்டி யிருக்கிறது. கரும்பு கிருஷியினால் ஏராளமான லாபம் ஏற்பட வழியுண்டு. ஆனாலும் கருப்பம்புள்ளை முதலிய நிலத்தில் நட்டது முதல் மாகுலை வெல்லமாக்கும் வரையில் ஏற்படும் செலவு, ஏக்கர் ஒன்றுக்குக் குறைந்தது ரூபாய் 200 ஆகும். நமது ஐந்து ஏக்கர் பண்ணையில் கரும்பு நடத் தகுந்த நிலமிருந்தும் இக்கிருஷி செய்வதற்குத் தேவையான பொருளும், கூலியாட்களும் இல்லாமல் போனால், கரும்புக் கிருஷியைக் கனவிலும் நினைக்கமுடியுமா! கரும் பாலை பூட்டியவுடன் இராப்பகலாய் ஓயாமல் 20 முதல் 30 தினங் கள் வரையில் வேலை செய்தால்தான் நல்ல விளைச்சலுள்ள ஒரு ஏக்கர் கரும்புப் பயிரிலிருந்து உருவான தொகையை எடுக்க முடியும். விடாமல் ஆலையை இழுக்க குறைந்தது மூன்றுஜதை வண்டிமாடு களாவது இதற்கு வேண்டியிருக்கும். பணமும், பலமும் ஏராளமாக இருப்பதோடு வடிகால் வசதி அமையப் பெற்றதும், வருஷம் பூரா வும் ஏராளமான தண்ணீரைப் பாய்ச்சக்கூடிய சாதனங்களை உடைத் தாயிருக்கும் பூமியாகவும் இருந்தால், கரும்புக் கிருஷியை ஏற்றுக் கொள்ளுவதால் ஏராளமான லாபமேற்படும். ஆனாலும் 5 ஏக்கர் களிலும் ஒரே வருஷத்தில் கரும்பை நட இடமிராது. ஏனெனில் ஒருவருஷம் கரும்பு நட்ட நிலத்தில் மறு இரு வருஷங்களிலாவது கரும்பை நடக்கூடாது. அமோகமாகச் செழித்து வளரக்கூடிய பயிர் வகைகளில் கரும்பு முக்கியமானதாக இருப்பதால் பூசாரத்தை கரும்புச் சாகுபடி மிகவும் ஆத்திரத்துடன் உறிஞ்சிவிடுகிறது. எனவே 5 ஏக்கர் விஸ்தீரண மிருப்பின் அதில் ஒரு ஏக்கரில் மட்டில் கரும்புப் பயிரைச் சாகுபடி செய்யலாம். இதையும் வருஷத்திற்கு வருஷம் இடத்தைமாற்றி சாகுபடி செய்யவேண்டும். குடும்பத்தின் பணத்தேவை அதிகமாக இருந்தாலும் 5 ஏக்கர் பண்ணையில் பணத் திற்கான பயிரைக் கிருஷி செய்யப்படும் விஸ்தீரணம் 1½ ஏக்கர் களுக்குமேல் அதிகப்படக் கூடாது.

தற்போது, கரும்பைத் தவிர்த்துப் பணப்பயிராகப் பலவகைப் பட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கோயம்பத் தூர் ஜில்லாவில் பணப்பயிர், கம்போடியா பருத்தியும், கரும்பும், குண்டூர் ஜில்லாவிலும், கிருஷ்ணா ஜில்லாவிலும், பணப்பயிர்கள், மிளகாயும், புகையிலையும். தென்னாற்காடு சேலம், வட ஆற்காடு, சித்தூர் முதலிய ஜில்லாக்களில் மணிலாக் கொட்டையே பணப் பயிராகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. காவிரிப்பாசனத்தின் கீழுள்ளவர்களுக்கும், பவானி, நொய்யல், காளிங்கராயன் வாய்க்கால் முதலிய நீர்ப்பாசனங்களின் கீழுள்ள கிருஷிகர்களுக்குப் பணந்தரும் சாகுபடி வாழை. மாரி அற்பமாகப் பொழியும் பிரதேசங்களுக்குப் பணப்பயிர் பருத்திதான். எனவே ஒரு குடும்பத்திற்கு விவசாய வினை பொருள்களின் தேவையைத் தவிர்த்துத் தேவையாயிருக்கும் பணத்தை, பண்ணையினின்று எடுக்க எந்தப் பயிரைச் சாகுபடி செய்ய வேண்டுமென்று பகுத்தறிவுடன் நிர்த்தாரணம் செய்யவேண்டும்.

ஒரே பணப்பயிரைச் சாகுபடி செய்வதைக் காட்டிலும், இரண்டுக்கு மேற்பட்ட பணப்பயிர்களை ஒன்று அல்லது ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணத்திற்குள் செய்வதுதான் புத்திசாலித்தனமாகும். நாம் பயிரிடும் கைத்தொழிலுக்கான, பணப்பயிர்களின் விலையைத் தற்போது நிர்த்தாரணம் செய்வது பிறநாட்டார்களாயிருப்பதால் அவர்களுடைய தேவைக்குத் தகுந்தவாறு தான், நாம் கஷ்டப்பட்டுப் பயிர் செய்து கொடுக்கும் விலைபொருள்களுக்கு விலை கொடுப்பார்கள். ஒரே விதமான பணப்பயிரைப் பயிரிட்டால், விவசாயிகளின் குடும்பத்திற்கு இன்றியமையாத பணத்தேவையைப் பூர்த்திசெய்ய முடியாமல் போய்விடும். இரண்டு மூன்றுவிதமான பணந்தரும் பயிர்களைப் பிரதி வருஷமும் பயிர்செய்தால் ஒரு கிருஷிகனது குடும்பத்திற்குத் தேவையாக இருக்கும் தொகையை அடைய மார்க்கமுண்டு.

பணத் தேவையோடு, விவசாயிகளின் குடும்பத்திற்கு முக்கியமாக வேண்டியிருப்பது உணவுப் பொருள்கள். கிருஷிகனுடைய குடும்பத்திற்கும், அவனது பண்ணையில் வேலைசெய்யும் பண்ணையாட்களின் குடும்பத்திற்கும் தேவையான தானியங்களை அப்பண்ணையிலேயே உற்பத்தி செய்து தீரவேண்டும். ஏனெனில் "சோத்துக் தறை' அதிகமாகத் தலைகாட்டும் பண்ணைகளில் வேலை செவ்வனே நடைபெறாது. ஊக்கமும், உழைப்பும் அங்கு அதிகமாக நிலவு மென்று எண்ணவும் இடமுண்டோ? பண்ணையின் தண்ணீர் வசதியையும், அங்கு மாரி பொழியும் தன்மையையும், சீர்தூக்கிப் பார்த்துவிட்டு, விவசாயிகளின் குடும்பங்களும், பண்ணையாட்களின் குடும்பங்களும் உபயோகிக்கும் தானியங்களை அப்பண்ணையின் விஸ்தீரணத்தில் பாதிக்குக் குறையாமல் உள்ள பூமியில் விளைவிக்க வேண்டும். அதாவது 5 ஏக்கர் பண்ணையில் 2½ முதல் 3 ஏக்கர் வரையில் தானியப் பயிர்களைச் செய்துதான் ஆகவேண்டும். மாரி காலத்தில் சோளம், கம்பு, கேழ்வரகு, முதலியவற்றைப் புஞ்சைப் பயிராகவும் கோடைகாலத்தில் கிணற்றுப் பாசனத்தின் கீழும் பயிர் செய்யலாம். நெல்லை நஞ்சைப் பயிர்களாகவும் தோட்டப் பயிராகவும் செய்யலாம்.

மிகவும் ஆழமாக உழுது, பரிபூரணமாக உரமிட்டு, காலாகாலத்தில் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சி வந்தால் 2½ ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தின் தானிய மாசூலைக் கொண்டு, 2, 3 விவசாயக் குடும்பங்களின் சோற்றுப் பேச்சை ஒழித்து விடலாம். பண்ணையின் பரப்பில் பாதிக்குமேல் தானியப் பயிர்கள் செய்தால்தான் பண்ணையிலுள்ள கால் நடை குடும்பத்திற்குத் தேவையான தீவனம் கிடைக்கும். ஏனெனில் பணப் பயிர்களினாலும், இதர பயிர்களினாலும், விவசாயப் பண்ணையின் ஜீவாதாரம் போலுள்ள கால் நடைகளுக்குத் ஜீவனம் ஏற்படுகிற தில்லை. எனவே, ஒரு விவசாயப் பண்ணையிலுள்ள இரண்டு ஜதை மாடுகளுக்கும், ஒன்று அல்லது இரண்டு பசுக்களுக்கும் தேவையாயிருக்கும் ; பருமனான மாட்டுத்

ஜீவனத்தை உற்பத்திசெய்துகொள்ள சுமார் 2½ ஏக்கரில் தானியப் பயிர்களை செய்துதான் ஆகவேண்டும். பணப்பயிரை யிட்டு, அதனால் கிடைக்கும் பொருளைக் கொண்டு மாட்டுத் ஜீவனத்தை விலைக்கு வாங்கிவிடலா மென்று நினைப்பது எப்பொழுதும் நல்லதல்ல. இவ்வாறு நினைத்து ஏராளமான விஸ்தீரணத்தில் பணந்தரும் பயிர்களை விவசாயிகள் விளைவித்து வருவதால்தான் நாட்டின்கண் பஞ்சம் அடிக்கடி ஆதிக்கம் பெற நேர்ந்திருக்கிறது.

கிருஷிகனுடைய குடும்பத்திற்கு அத்தியாவசியமான, தானியங்களையும், மாட்டுத் ஜீவனத்தையும், கொஞ்சம் பொருளையும் உற்பத்தி செய்வதற்கான விஷயங்களைப் பற்றி இதுவரையில் குறிப்பிட்டு வந்தேன். இவைகளைத் தவிர்த்து விவசாயக் குடும்பத்திற்குள்ள தேவைகள் பல உள. வெறும் சோற்றை மட்டில் எவனும் தின்பதே யில்லை. சாதத்தோடு குழம்பு வேண்டும். குழம்பிற்குப் பின் கறி வேண்டும். உடைகள் வேண்டும். தானியங்கள் மட்டிலுமிருந்தால், கிருஷிகனது சாப்பாட்டு விஷயம் தீருவதில்லை. குழம்பிற்கு மிளகாய் வேண்டும், மல்லி வேண்டும், பருப்பு வேண்டும், காய்கறிகள் வேண்டும், வெங்காயம் வேண்டும். சாப்பாட்டிற்கும், ஸ்நானம் செய்துகொள்ளுவதற்கும் வெளிச்சத்தை வைத்துக் கொள்ளுவதற்கும் எண்ணெய் வேண்டும். மாடுகளைக் கட்டுவதற்கும், மாடுகளை ஏரில் கட்டி ஓட்டுவதற்கும் கயிறு வேண்டும். இவைகளின் அவசியத்திற்கும், தேவைக்கும் தகுந்தவாறு, பணந்தரும் பயிர்களுக்கும், தானியப் பயிர்களுக்கும் ஒதுக்கி வைத்த விஸ்தீரணம் நீக்கிவிட்டு எஞ்சிய பண்ணையின் பரப்பில், மேற் கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பயிர்களைக் கிருஷி செய்ய வேண்டும்.

சேலம் ஜில்லாவில் மாரி காலத்தில் ஒரே நிலத்தில் துவரை, ஆமணக்கு, மணிலாக்கொட்டை, கம்பு அல்லது சோளம், முதலிய பயிர்களை ஒருமிக்கப் பார்க்கலாம். சேலம், கோயமுத்தூர் ஜில்லாக்களில் தானியப் பயிரான சோளத்தோடு மொச்சையையோ, உளுந்தையோ, காராமணியையோ கலப்பு சாகுபடியாகச் செய்கிறார்கள். பல்லாரி கடப்பை, கர்னூல், அனந்தபூர் முதலிய மத்திய ஜில்லாக்களில் சோளத்தைப் பருத்தியுடன் கலப்புப் பயிராக இடுகிறார்கள். அதாவது சோற்றுக்கான பயிர் ஒன்றையும், பணத்துக்கான பயிர் ஒன்றையும் ஒரே பூமியில் பயிரிட்டு வருகிறார்கள். பணத்திற்கான பயிர் ஒன்றையும், சோற்றுக்கான பயிர் ஒன்றையும் ஒரே நிலத்தில் விடுவதால் இவ்விரு பயிர்களைச் சம்பந்தப்பட்ட வரையில் நிலத்திற்கும், நிலத்தை யுடையவனுக்கும் நன்மையே. சோளம் 4 மாதப் பயிரானதால், ஓராண்டு பூராவும் நிலத்திலிருக்கும் பயிரான பருத்தியின் வளர்ச்சி சோளத்தினால் யாதொரு இடையூறும் நேருவதில்லை. கலப்பு கிருஷி, விவசாய சாஸ்திரத்திற்கு விரோதமாக இருந்தாலும், பயிர்களின் வயதை மட்டிலும் சீர்தூக்கிப் பார்த்தால், இக்கலப்புக்கிருஷியை ஏற்றுக்கொள்ளலாமென்று தோன்றுகிறது.

கடுகு, எள்ளு, கம்பு முதலிய மூன்றையும் சில இடங்களில் ஒரே காலத்தில் கலப்புப் பயிராக இடுகிருர்கள். எள்ளு, மணிலாக்கொட்டை, துவரை, இம் மூன்றும் சில விடங்களில் கலப்பு சாகுபடியாகச் செய்யப் படுகின்றன. தென்னுற்காடு ஜில்லாவில் பணத்துக்கான அவுரியை, எண்ணெய் வித்தான எள்ளோடு கலந்து விதைக்கிருர்கள். மல்லியையம், சோளத்தையும், புளிச்சையென்னும் சோகுப்பயிரையும், பல இடங்களில் கலப்புப் பயிராக இடுகிருர்கள். மிளகாய் நாத்து நடுவதற்காகவும், காய்கறிப் பயிர்களுக்காகவும் கொத்துமல்லிக்காகவும் அரை ஏக்கர் விஸ்தீரணத்தை ஒதுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இந்த அரை ஏக்கர் தோட்டத்தைக் குடியிருக்கும் வீட்டுக்குச் சமீபத்திலும், கிணற்றுக்குச் சமீபத்திலும் அமைத்துக்கொள்ளவேண்டும். இந்த தோட்டத்தைச் சுற்றி நல்ல வேலிகளமைக்கவும் வேண்டும். எப்பொழுதும் நமது கவனம் இத்தோட்டத்தின்பால் செல்லக்கூடிய ஸ்தானத்தில் காய்கறித்தோட்டத்தை ஏற்படுத்துவதே ஒழுங்கு.

ஒரு அரை ஏக்கர் விஸ்தீரணத்தில், பருத்தியைப் பயிரிட்டால் போதுமானது. இந்த அரை ஏக்கர் விஸ்தீரணத்திலிருந்து கிடைக்கும் பருத்தியைக்கொண்டு, பண்ணையிலுள்ள ஜனங்களுக்கு ஆடைகளைத் தயாரித்து விடலாம். வேலையில்லாத காலத்தில் நூல் நூற்கவும், ஆடைகளை நெய்யவும், இரண்டு மூன்று கைராட்டினங்களையும், ஒரு கைத்தறியையும். ஒவ்வொரு பண்ணையிலும் வைத்து வேலை செய்தால் ஆடைகளுக்காக விவசாயிகள் அயலார் கைகளை எதிர் பார்க்கவேண்டி யிராது. கோடை காலத்தில் ஒழிவு நேரம் ஏராளமாக, பண்ணையாட்களுக்கும், பண்ணையின் அதிபருக்கும், பண்ணையிலுள்ள ஸ்திரீகளுக்கும் இருப்பதால், இந்த ஓய்வு நேரத்தை வீணுக்காது நூல் நூற்பதிலும், துணி நெய்வதிலும் சழித்தால் பண்ணையின் பொருளாதாரம் அபிவிருத்தி அடைவதோடு, நாட்டின் பொருளாதார நிலைமையே சீர்படும்.

பஞ்சி நிற்கும் அரை ஏக்கரில், துவரை, எள்ளு, உளுந்து, மொச்சை முதலிய பயிர்களையிட்டு தானியங்களின் தேவையோடு ஏற்படும் இதர உணவுப் பொருள்களின் தேவைகளைக் கிருஷிகர்கள் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

சிறிய வரப்புகளிலும், கிணற்றுமேடு, வீட்டுத்தோட்டம் முதலிய விவசாயத்திற்கு லாயக்கா யில்லாத இடங்களிலும் ஆமணக்கைப் பயிர் செய்யவேண்டும். வாய்க்கால்களின் ஓரத்திலும் ஆமணக்கு விதைகளை நடலாம். ஆமணக்குச்செடி காற்றோட்டத்தையும், தனிப்பட்ட வாழ்க்கையையும் அதிகமாக விரும்புவதாலும், விளக்குக்காகவும், வைத்தியத்திற்காகவும் மாத்திரம் கிருஷிகர்களின் குடும்பங்கள் ஆமணக்கு எண்ணெயைத் தேடுவதாலும், விஸ்தாரமான பரப்பில், ஆமணக்கைப் பயிரிடத் தேவையில்லை. கிரிஸனுயில் என்

றழைக்கப்படும் மண்ணெண்ணெயைக் கிருஷிகர்களின் குடும்பங்களே உடனே பகிஷ்கரிக்க முடியும். பண்ணைக்கு வெளியிலிருந்து வரவேண்டிய பொருள்களில் ஒன்றாக மண்ணெண்ணெய் இருப்பதாலும், இப்பண்ணை சுயராஜ்யம் பெறவேண்டுமானால் வெளியிலிருந்து அவசியமாக வரவேண்டிய பொருள்களின் எண்ணிக்கையை மிகவும் சிறியதாக விவசாயிகள் வைத்துக்கொண்டு தங்களது வாழ்க்கையை நடத்துவதே புத்திசாலித் தனமாகும்.

விவசாய குடும்பங்களுக்கு இன்றியமையாத தேவைகளாக இருக்கும் உப்பு, விவசாயக் கருவிகள் செய்வதற்கு வேண்டிய இரும்பு, ஆகிய பண்ணையில் உற்பத்தி செய்யக்கூடாத இரு பொருள்களைத் தவிர்த்து தேவையாக வுள்ள எல்லா இதர பொருள்களையும் பண்ணையிலேயே உற்பத்தி செய்துக்கொள்ள வேண்டிய முறையில் விவசாயப் பண்ணையையும், வருஷாந்தர சாகுபடி திட்டத்தையும் அமைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு, பண்ணையின் தேவைகளையும், பண்ணையிலுள்ள கிருஷிக் குடும்பங்களின் தேவைகளாக வுள்ள பொருள்களேயும் பண்ணையிலேயே உற்பத்தி செய்து கொண்டு விட்டால் அப்பண்ணைக்குப் பரிபூரண சுயராஜ்யம் கிடைத்து விடும்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருக்கிற படி, இந்த ஐந்து ஏக்கர் பண்ணையில், ஒரு ஏக்கர் பரப்பையுள்ள நிலத்தில், பணத்திற்காக மணிலாக் கொட்டையையோ, புகையிலையையோ, மஞ்சளையோ, இஞ்சியையோ, பயிரிடுதல் உத்தமம். விற்பதற்காகவும், ஆடைகளுக்காகவும் பருத்தியைப் பயிரிடலாம். பணத்திற்கான இருவகைப் பயிர்களையாவது ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் பயிர் செய்ய வேண்டுமென்றும் இதற்கு முன்னே குறிப்பிட்டிருக்கிறேன். பிரதி வருஷமும் ஒரே நிலத்தில் ஒரே விதமான பயிரைக் கிருஷி செய்வது கூடாது. மூன்று வருஷங்களுக்கு ஒரு முறைதான், முன் அந்த நிலத்தில் இட்ட பயிரை மீண்டும் அதே நிலத்தில் பயிர் செய்யலாம். விற்பதற்காகச் சாகுபடி செய்யப்படும் பயிர்கள் விஷயத்தில், "பயிர் மாற்றல்" முறையைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்க வேண்டும். மனிதனுக்குக் "கசப்பு" ஏற்படுவதைப்போல், நிலத்திற்கும் கசப்பு ஏற்படக்கூடும். பயிர்களுக்கும் நிலத்திற்கும் கசப்பு ஏற்படும்படி விடக்கூடாது. மாற்றுப் பயிர்களைப் பயிர் செய்வதால் பண்ணைக்கு அபார லாபமேற்படும். நிலம் திருந்தும்.

பூசாரத்தை, கரும்பு, வாழை, மஞ்சள், புகையிலை முதலிய பயிர்களைப் போன்று, சுரண்டும் பயிர் வகைகளை ஏராளமான விஸ்தீரணத்தில் எப்பொழுதும் பயிர் செய்யவே கூடாது. விற்பதற்காகக் கிருஷி செய்யப்படும் பயிர்களால் விவசாயப் பண்ணையின் உர சத்து அப்படியே அப்புறப்பட்டுப் போய்விடுகிறது. ஏராளமான லாபம் அடையலாமென்று எண்ணி அப்படியே வண்டியிலேற்றி

அனுப்பவேண்டிய பயிர்களை யிடுவது, பொன் முட்டைகளுக்காக அவைகளை யிட்ட கோழியின் வயிற்றைக் கீறி மோசம் போனவன் செய்கையை யொக்கும்.

மீதி இருக்கும் 4 ஏக்கரில், 2½ ஏக்கர் விஸ்தீரணத்தில் தானியப் பயிர்களில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ சாகுபடி செய்ய வேண்டும். ஒரு அரை ஏக்கரில் காய்கறிகள், மிளகாய், மல்லி, வெங்காயம் முதலியன பயிரிடுவதற்கு ஒதுக்கிவைத்து விடவேண்டும். இன்னுமொரு அரை ஏக்கரில், துவரை, உளுந்து, மொச்சை முதலிய கோதுப் பயிர்களைத் தனிபாகவோ அல்லது கலப்புச் சாகுபடியாகவோ, பயிர் செய்யவும் வேண்டும். மீதியிருக்கும் அரை ஏக்கரில் எண்ணெய் வித்துக்களான எள்ளு, மணிலாக்கொட்டை முதலியன சாகுபடி செய்யலாம்.

விவசாயத்தில் மாத்திரம் கட்டுப்பாடான கோட்பாடுகள் இல்லை. விவசாய குடும்பத்திற்குத் தேவையான விளை பொருள்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு பண்ணையிலும் உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற உறுதி, ஒவ்வொரு கிருஷிகனுக்கும் ஏற்பட்டால் நாட்டின்கண் வறுமை தலைகாட்டாது. ஊக்கத்துடனும், தைரியத்துடனும் இவ்வைந்து ஏக்கர் பண்ணையை வைத்தாண்டால் சோற்றுக்குத் தரித்திரம் ஏற்படாது. நாட்டிலுள்ள படித்த யௌவனர்கள் எல்லோரும் கிராமங்களுக்குத் திரும்பி, கிருஷியை ஏற்றுக்கொண்டு, தனிப்பட்ட வாழ்க்கை சுயராஜீயத்தை அடைவார்களேயாயின், வெகு சீக்கிரத்தில் நாடு முன்னுக்கு வருவதோடு, விடுதலையையும் அடைந்துவிடும், இதில் யாதொரு சந்தேகமுமில்லை.

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஐந்து ஏக்கர் பண்ணையின் சொந்தக்காரரின் குடும்பமும், குறைந்தது இரண்டு பண்ணையாட்களின் குடும்பங்களும் மனோ திருப்தியுடன் வாழ்க்கையை நடத்த முடியும். மேஜைக்கு அடிமைகளாக நின்று, நாம் உழைக்கும் உழைப்பைவிட அதிகமான உழைப்பு பண்ணையை நடத்துவதற்குத் தேவையில்லை. ஆனாலும் ஊக்கத்திற்கும், உழைப்புக்கும் தகுந்தவாறு பூமாதேவி கூலிகொடுக்கச் சித்தமாயிருக்கிறாள்.

தற்போது, தென்னிந்திய விவசாயத்திற்குத் தேவையாயிருப்பன மனித சக்தியும், புத்திசாலித்தனமுமே. படித்த யௌனர்கள் "வேலையில்லை; வேலையில்லை" என்று ஏன் தற்போது திண்டாட வேண்டும்? இவர்கள் சர்வ கலாசாலைகளுக்குக் கொட்டி அழுத தொகையில், ஒரு பகுதியை மாத்திரம் வைத்துக்கொண்டு, நான் இங்கு விவரித்துள்ளபடி ஒரு ஐந்து ஏக்கர் பண்ணையை வைத்தாளட்டும். அடிமை மணம் வீசப்பெற்ற பல தொழில்களினால் கிடைக்கும் லாபத்தைப்போல் இப்பண்ணையி னின்று கிடைக்கவில்லை யென்று புத்திசாலித்தனமான உழைப்பாளி கூறவே முடியாது.

ஐந்து ஏக்கரில் சுயராஜ்யம்

சாகுபடிக்கு லாயக்காயுள்ள ஏராளமான நிலங்கள் கரம்பாயிருக்கின்றன. படித்த யௌவனர்களே! "வேலையில்லை, வேலையில்லை," என்று சொல்லிக்கொண்டு தெருவில் திண்டாடும் பாரதப் புதல்வர்களே! இனியும் சர்வ கலாசாலைகளையும், அடிமை மேஜைகளையும் கட்டிக்கொண்டழப்போகிறீர்களா? ஐந்து ஏக்கர் விவசாயப் பண்ணையை நான் இங்கு விவரித்திருக்கிறபடி சாகுபடி செய்து பாருங்கள். உங்களுக்குத் தனிப்பட்ட வாழ்க்கை சுதந்திரம் கட்டாயம் சித்திக்கப் போகிறது. தனிப்பட்ட வாழ்க்கையைப் பெற்ற சுதந்திர புருஷர்களை உட்கொண்ட நாடுதான் சுயராஜ்பத்தை அடைய லாயக்குள்ளது. அடிமை வாழ்க்கையை ஒழியுங்கள்! இயற்கை வாழ்க்கைக்குத் திரும்புங்கள்! உங்களைப் போற்றி ஆசரவு அளிக்க பூமாதேவி காத்துக்கொண்டிருக்கிறாள். இவ்வாழ்க்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளுவதால் உங்களுக்கும், உங்களது நாட்டுக்கும், ஜீவராசிகளுக்கும் நன்மை யுண்டு. ஐந்து ஏக்கர் பண்ணையிலேயே சுயராஜ்ப மிருக்கிறது. இஃது உண்மை.

---

* இந்த வியாசம், "லக்ஷ்மி" மலர் 1, இதழ் 8-ல் "விவசாயப் பண்ணை" யென்ற மகுடத்தின் கீழ் எழுதப்பட்ட வியாசத்தின் தொடர்ச்சி யாகும். அடுத்த இதழில் மூலதனம், லாபம் முதலியவைகளைப் பற்றி விவரிக்கப்படும்.

சோறூட்டல்.

அம்மா சோ றுண்டிடாய்! உண்டிடாய்!
ஆனை வரும் பார்த்திடாய்! பார்த்திடாய்!
பொன்னே சோ றுண்டிடாய் உண்டிடாய்
பூனை வரும் பார்த்திடாய் பார்த்திடாய்
தாயே சோ றுண்டிடாய் உண்டிடாய்
தத்தை வரும் பார்த்திடாய் பார்த்திடாய்
கண்ணே சோ றுண்டிடாய் உண்டிடாய்
காகம் வரும் பார்த்திடாய் பார்த்திடாய்
அன்பே சோ றுண்டிடாய் உண்டிடாய்
அன்னம் வரும் பார்த்திடாய் பார்த்திடாய்
தேனே சோ றுண்டிடாய் உண்டிடாய்
சேவல் வரும் பார்த்திடாய் பார்த்திடாய்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

(545-ம் பக்கம் தொடர்ச்சி.)

மலைநாட்டிலிருந்து திருவாரூருக்குப் பயணம்.

இங்ஙனம் இருக்கு நாளில் நம்பி யாரூரருக்குத் திருவாரூர் நினைவு ஒரு நாள் மேலிட, அவர்

பொன்னு மெய்ப்பொரு ளுந் தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
யின்ன தன்மைய னென்றறி வொண்ணா
வெம்மா னையெளி வந்தபி ரானை
யன்னம் வைகும் வயற்பழனத் தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

எனவரும் (59-ஆவது) திருப்பதிகத்தைப் பாடிச், சேரமானிடம் விடை பெற்று ஆரூர் நோக்கிப் புறப்பட்டார். சேரரும் உம்மை விட்டுப்பிரிய முடியவில்லையே என்று பின் தொடர்ந்தார். அது கண்ட ஆரூரர் "வருந்தாதீர்! உமது பதியிலேயே இருந்து அரசாளுதீர்" என்று கூற, அதற்குச் சேரமான் "உமது பாதமலர்த் திருத்தொண்டே எனக்கு அரசாட்சி; எனினும் திருவாரூருக்கு எழுந்தருள உமக்குள்ள காதலுக்குத் தடைகூற அஞ்சுகின்றேன்" என, ஆரூரரும் "யான் திருவாரூரைமறந்திரேன். நீர் இங்கிருப்பீராக" எனத் தேறுதல் கூறினர். சேரரும் அநேக ஆள்கள் தலைமிசை நானாவர்க்கப் பொருள்களையும் நவமணிகளையும் ஏற்றி ஆரூரருடன் அனுப்பினர். இந்த ஆள்களை முற்பட அனுப்பி ஆரூரர் தமது பரிசனங்களுடன் புறப்பட்டனர். சேரர் பெருமானும் ஆரூரரைத் தோளோடு தழுவி விடை பெற்றுநின்றனர்.

210340

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

* வேடுபறி.

மலைநாடெலாங் கடந்து வாசந்தி வனம் மாதவ வனம் எனப்படும் குருக்கத்திக் காடு சூழ்ந்த திரு முருகன் பூண்டி யென்னும் தலத்துக்குச் சமீபமாக ஆரூரர் வரும்போது, சிவபிரான் "நம்பிக்குக் கொடுக்கும் பொன் எல்லாம் நமது கையாற் கொடுக்கப்பட வேண்டும். இப்போது இவன் கொண்டு போகும் யாவற்றையுங் கவர்ந்து நமது கைப் படவே கொடுப்போம்" என நினைத்தோ ஒரு திருவிளையாடலைக் கருதித் தாம் வேடர்தலைவராகவும் நந்தியும் பூத கணங்களும் வேடர்களாகவும் வேடம் பூண்டு மேற்றிசை நடந்து ஆரூரருடைய ஆள்களுக்கு எதிர் தோன்றி அவர்களை வழி மறித்தனர். இவ்வேடர்களோடு எதிர்த்துப் போர் செய்ய முடியாது ஆள்களும் தாம் சுமந்து சென்ற நிதிக்குவைகளை எல்லாம் வேடர்களுக்குப் பறி கொடுத்து அவர்கள் முன்பு நிற்க அஞ்சிப் புறங்காட்டி ஆரூரரிடம் ஓடினர். வேடர்களும் விடாது தொடர்ந்தனர். இக் கோலாகலத்தைக் கண்ட ஆரூரரும் அஞ்சி நடுங்கி "என்னே ஈசன் செயல் இங்ஙனம் இருக்கின்றதே" எனக் கலக்க முற்றனர். இங்ஙனம் அச்சுற்று நிற்கும் ஆரூரரையும் வேடரெலாஞ் சுற்றி வளைந்தனர். அச்சத் தால் மெய் யெலாம் வெயர்த்து வாயுலர்ந்து நின்ற அன்பரை வேடர்தலைவனுஞ் சிவபிரான் கண்டு ஏனைய வேடர்களை நோக்கி "இவனைத் தண்டிக்காது இவன் மாட்டுள்ள பொருள்களை மட்டுங் கவர்வீர்களாக" எனப் பணித்தனர். வேடர்களும் ஆரூரரை நோக்கி "இங்கு உன்னிடத்துள்ள பொருள்களை எல்லாம் நல்ல படியே தடையின்றிக் கொடுத்து விடவும் தரா விட்டால் நாங்கள் கொலைக்கஞ்சா வேடர் என்பதைச் சற்று ஞாபகத்தில் வைக்கவும்" எனக் கூறி வெருட்டினர். ஆரூரரும் இதைக் கேட்டு வாடி தம் மாட்டுள்ள உடுப்பனவும் பூண்பனவுமான ஆடை யாபரணங்களை உடனே கொடுத்து விட்டு ஏழைபோலத் திகைத்து நின்றனர். இங்ஙனம் பொருள்களைக் கொள்ளை கொண்டு சென்ற வேடர் குழாங்கள் கண்ணுக்கு மறைந்து தமதிருப்பிடம் சேருவதற்கு முன்பே அவர் சென்ற வழி

---

* இது திரு முருகன் பூண்டிப் புராணத்துள்ளபடி எழுதப் பட்டது.

யைக் காட்ட விரும்பி அடியார்க் கிரங்கும் ஆனைமுகக் கடவுள் அக்காட்டில் ஒரு பக்கம் வந்து நின்று கூகூ எனப் பரிவுடன் கூவினர். எதிர்பாராத இவ்வொலியைக் கேட்ட வேடர் தலைவர் தமது மூத்தமகன் செய்த தகாத செய்கையை நோக்கிச் சினந்து "யாம் செய்த முயற்சியை உலகோர்க்கு கூகூ எனக் கூவித் தெரிவித்தாய்! அவ்வளவு தயவா உனக்கு! அங்ஙனமாயின் இப் பச்சை மரத் தடியில் எஞ்ஞான்றும் பரிவொடும் உறைதி" எனக் கட்டளை யிட்டு மாதவி வனத்துள்ள தமதிருக்கையில் ஏனைய வேடரொடும் மறைந்தனர். "கூகூ" எனக் கூவியமர்ந்த விநாயக மூர்த்திக்கு இன்னும் "கூப்பிடு பிள்ளையார்" என்னும் அருட்பெயர் விளங்குகின்றது. "கூகூ" "என யாரோ தயவொடு கூவினரே. அஃது யாரோ! இவ் வேடர்கள் எங்குப் போய் ஒளித்தனரோ! நமது ஆண்டவன் இக்கோலத்துக்கு நம்மை உள்ளாக்குவாரா! இதைக் கண்டறிவோம்" எனத்துணிந்து ஆரூரும் வேடர்கள் சென்ற காலடிச் சுவடு பற்றிக் கூகூ என்னும் ஓசை வந்த வழியே செல்லக் "கூப்பிடு பிள்ளையார்" வீற்றிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர். விநாயக மூர்த்தியைக் கண்டதும் ஆரூரர் விம்மிதம் உற்று "ஓ! ஓ!" கருணாகர மூர்த்தியாம் கஜானனப் பெருமானா இங்கு வீற்றிருப்பது: நன்று! நன்று! முன்னர் மகனிருந்தாற் பின்னர்த் தந்தை இங்குத்தான் இருக்க வேண்டும்" எனத்தேறி அந்த மாதவி வனத்துள் நுழைந்து தமது நாயனாரை நாடினார் ஓடினார் எங்குற்றாய் ஈசா என்றிரங்கி நெட்டுயிர்த்தார்! இங்ஙனம் தேடினவர் ஈசனிருக்கும் இடத்தைக் கண்டறிந்து ஓ! ஓ! நீர் இங்கிருந்துமா வேடர்கள் என் பொருள்களைக் கவர்ந்தனர். வில்லைக்காட்டி வெருட்டினார்களே! செற்ற மொழிகளைச் செப்பினார்களே! கல்லா லெறிந்து மோதினார்களே! உடுத்த கூறை (உடையையும்) யையும் எடுத்துச் சென்றனர்களே! இந்த முருகன் பூண்டி என்னும் ஊருக்கு எல்லை காக்குந் திறன் உமக்கில்லையாகில் நீர் எத்துக்கிங் கிருந்தீர்! எம்பிரானே!

"வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினாலெறிந் திட்டு மோதியுங் கூறை கொள்ளு மிடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வா
யெல்லைக் காப்ப தொன்றில்லை யாகில் நீர் எத்துக் கிங்கிருந்தீர்
[எம்பிரானே!"

எனவரும் "கொடுகு வெஞ்சிலை"த் திருப்பதிகத்தைக் கூறி (49-ஆவது பாடல்) நீர் தான் வேடர் தலைவனாய்த் தோன்றி என் பொருள்களைக் கவர்ந்த கள்வனானீர். முன்னர் வலைஞனானீர், வணிகனானீர், பள்ளனானீர், நீர் வேடனாவதற்குப் பின் வாங்குவீரா!

"கடுத்தனுங் களன்மா களனரி வலையன்
கழனியிற் கடைஞ னோர் வணிகன்
தொடுத்தசூத் திரனா னவிதன் வண்ணான்
தொண்டுகொண் முதலிகோ விடையன்
தடுத்திலா வதக்குப் பூட்டுவ நூலோன்
எனப்பலர் சாற்றுமிவ் வண்ணம்
எடுத்தநீர் இன்று வேடராய்ப் படிவம்
எடுப்பதற் குளமிசை யீரோ?"

நீரோ நிர்வாண மூர்த்தி! உமது ஆபரணமோ பாம்பு! போர்வையும் உடையும் வேண்டு மென்றால் யானைத்தோல், புலித்தோல், சிங்கவுரி இவைகள் உள்ளனவே! வேறு ஆபரணம் வேண்டு மென்றால் பன்றிக் கொம்பு, கொக்கிறகு, ஆமை ஓடு, தலை மாலைகள் முதலிய அரும் பொருள்களைச் சேமித்து வைத்திருக்கிறீரே. உமக்கு எதுக்குப் பொன்னும் பீதாம்பரமும். "எமது மனைவிக்கு வேண்டும்" என்பீரோ! உமது மனைவியுந்தான் திகம்பரி, நிர்வாணி, யாயிற்றே! இல்லை எமது மூத்த பிள்ளைக்கு வேண்டும் என்பீரோ? அவர்தான் வேண்டுவார் வேண்டுவதைத் தந்து ரக்ஷிக்கும் தந்திமுக வள்ளலாயிற்றே! இல்லை இல்லை எமது இளைய பிள்ளைக்கு வேண்டும் என்பீரோ! அவர் தான் வரதராஜ மூர்த்தி, வேண்டிய போதடியர் வேண்டிய போகமது வேண்ட வெறுததவு பெருமாள் ஆயிற்றே! எனக் கூறிப்பணிந்தனர். பணிந்து கோயிற் புறத்து வந்தனர். வரவும் கோயிலின் வாயிலில் கவரப்பட்ட பொருள்கள் எல்லாம் குவித்து வைத்திருப்பதைக் கண்டு இறைவன் திருவருளை வியந்து வியந்து மகிழ்ந்தனர். பின்னர், அப்பொருள்களை எடுத்துக் கொண்டு நிறை செல்வத் திருவாரூர் வந்து சேர்ந்தனர்.

(தொடரும்)

காலஞ்சென்ற ஸ்ரீமதி முனியம்மாள்.

தென்னாபிரிக்காவில் தர்பன் ரெயில்வே துவிபாஷியாகிய ஸ்ரீ சி. சங்கரன் பிள்ளைக்கு 1905-ல் இப்பெண்மணி பிறந்தாள். தர்பன் காந்தி செந்தமிழ் வித்தியாசாலையின் உபாத்தியாயர் கோ. இராமசாமி நாயுடு 1919-ல் மணந்தார். நல்லொழுக்கம், ஜீவ காருண்ணியம், ஈசுரபத்தி முதலிய அருங்குணங்களில் சிறந்து காணப் பட்டதோடு நம்முன்னோர் கொள்கைகளிலும் பெரிதும் பற்றுடையவளாயிருந்தாள். இப்பெண்மணி 1921-ல் ஒரு பெண்மகவு பெற்றாள். 1923-ல் மற்றொரு பெண்மகவு பெற்றாள். அதிலிருந்து நோய்ப்பட்டு எத்தகைய பரிகாரத்திலும் சிறிதும் குணப்படாமல் இளங்குழந்தையும் தானும் சென்ற அக்டோபர்மீ-ல் இறைவன் திருவடி சென்றனர். நல்லோர் நெடுநாளைக்கிரார் என்னும் வாய்க்கியம் பொய்க்குமோ!

கனந்தங்கிய C. P. ராமஸ்வாமி அய்யர், C.I.E.

திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளையவர்கள்.

பூரி அல்லது ஜகன்னாத்

கடற்கரைப் பட்டணங்களுள் பூரி அல்லது ஜகன்னாதம் என்ற க்ஷேத்திரம் மிக்கச் சிறந்தது. இது கல்கத்தாவிலிருந்து 310-வது மைலில் இருக்கிறது. உற்சவ காலங்களில் லட்சக் கணக்கான யாத்திரீகர்கள இத்தலத்தில் வந்து கூடுகின்றார்கள். இந்த க்ஷேத்திரம் ஒரிஸா மாகாணத்தைச் சேர்ந்தது.

ஒரிஸாவின் பூர்வீக சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் இந்த நாடு கலியுகம் ஆரம்பத்தில் உண்டானதென்றும், இந்த நாட்டைப் பரிக்ஷித்து ராஜனும், ஜனமேஜய ராஜனும் முறையே 757 வருஷ காலமும், 612 வருஷகாலமும் ஆண்டு வந்தார்களென்றும் சொல்லப்படுகிறது. அதற்கு யாதொரு ஆதாரவும் இல்லை. ஆனால் கிறிஸ்து பிறப்பதற்கு முந்தி அதாவது 262 பி. சி. யில் அசோகன் ஆண்ட காலத்தில் இந்த நாடு அவருக்குச் சேர்ந்திருந்ததென்றும் மோரி வம்சத்து அரசர்களின் காலததில் இந்த நாடு, அன்னிய நாட்டார்களின் படை யெடுப்புக்குத் தப்பி, இருந்ததென்றும் சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

" பூரி " என்ற பெயர் நிரம்ப காலத்திற்கு முந்தி வழங்கப்பட்டு வந்தது. 1731-வது வருஷத்தில் மிஸ்டர் டி. கிட்சென் என்பவரால் சாஸ்திரோக்தமாய் வரையப்பட்ட படத்தில் ஜகன்னாதம் என்று பெயர் வரைந்திருக்கிறதைக் காணலாம்.

1633 வருஷத்தில் (வில்லியம் பர்டன்) என்பவர் இத்தலத்தைப் பார்வையிட்டு, இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஜகன்னாத் என்ற ஸ்வாமியின் பெயரே இந்த க்ஷேத்திரத்திற்கு இடப்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்.

பூரி என்ற பெயரும் ஜகன்னாதம் என்ற பெயரும் இத்தலத்திற்குப் பெயராக வழங்கி வந்ததற்கு முந்தி அதாவது பல்லாயிரம் வருஷங்களுக்கு முந்தி இத்தலம் நீலாசலம் (Blue Hill) என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்திருக்கிற தென்பதை ஸ்தல புராணத்தில் காணலாம்.

பூரி தேவஸ்தானம் :—இத்தலத்து தேவஸ்தானக் கட்டடங்கள், 12-வது நூற்றாண்டில் ஆண்டுவந்த சுரங்க தேவர் என்ற அரசரால் கட்டத் துவக்கப்பட்டவை என்றும், கி. பி. 1197-ம் வருஷத்தில் அனங்க பீம தேவர் என்ற அரசர் காலத்தில் முடிவு பெற்ற தென்றும் சொல்லப்படுகிறது. கோவில்களைச் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கும் இரண்டு மதில்களுள் ஒன்று 665 அடி நீளமும் மற்றொன்று 644 அடி நீளமும் 22 அடி உயரமும் இருக்கின்றன. இம்மதில்களின் முகத்துவாரத்தில் இரண்டு கற்சிங்கங்கள், நிறுத்தப்

பட்டிருக்கின்றன. இந்த முகத்துவாரக் கட்டடத்தில் ஏற்பட்டிருக்கும் வேலைத் திறமை விசித்திரமா யிருக்கிறது. இக்கோவிலுக்கு இதைத்தவிர வேறு மூன்று முகத்துவாரங்கள் உண்டு. வடக்கு, கிழக்கு முகத்துவாரங்களில் ஏற்பட்டிருக்கும் சித்திரவேலை சாதாரணமானது. தென்புற வாயிலில், கல்லில் விசித்திர வேலையுடன் செதுக்கப்பட்ட 14 அடி உயரமுள்ள ஹனுமான் உருவம் மிகச் சிறப்புடன் விளங்கி வருகிறதைக் காணலாம். கோவிலைச் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கும் மேற் கண்ட சுவரைத்தவிர. கோவிலின் உட்புறத்தில் மற்ருெரு பெரிய சுவர் கட்டப்பட்டிருக்கிறது. இச்சுவர்களுக் கிடையில் மடப்பள்ளி அறைகளும், ஸ்ஞன அறைகளும், கச்சேரி அறைகளும் வேறு பல சிறிய கோவில்களும் இருக்கின்றன. கற்பாலயத்திற்கு முன்ஞல், ஜபமண்டபம் என்றும், சங்கீதக் கச்சேரி நடக்கும் மண்டபம் என்றும் பெயருடன் இரண்டு மண்டபங்கள் இருக்கின்றன. அதன் பின்ஞல் ஸ்ரீ ஜகன்ஞதர், பலபத்திரர், சுபத்திரை இம்மூவர்களுடைய உருவம் அமைந்த விக்கிரகங்கள் இருக்கின்றன. இவைகளில் ஸ்ரீ ஜகன்ஞதர் விக்ரகம் நிரம்ப புராதனமானது. இந்த விக்கிரகம், மூன்று தடவை சில்கா ஏரியில் புதைக்கப்பட்டிருந்த தென்றும், ஒரிஸா நாட்டுக் காடுகளில் பல வருஷ காலம் மறைத்து வைக்கப்பட்டிருந்த தென்றும், கடைசியாக 12-வது நூற்ருண்டில் ஆண்டு வந்தவரும் இப்பொழுதிருக்கும் இக்கோயிலைக் கட்டினவருமான சுரங்கதேவர் என்பவரால் இப்பொழுதிருக்கும் இத்தலத்திற்கு கொண்டுவந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட தென்றும் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ ஜகன்ஞத ஸ்வாமியும், ஸ்ரீ பலபத்திரரும் முண்டகக் கைகளுடனும் சுபத்திரை கைகளே இல்லாமலும் விளங்கி வருகிறதைக் காணலாம். இப்படி யிருப்பதற்குக் காரணம் அடியில் வருமாறு :—

ஸ்ரீ ஜகன்ஞத ஸ்வாமி விக்ரகம் ஒன்றை இத்தலத்தில் அமைத்துவைக்க வேண்டுமென்ற யோசனை அரசருக்கு உண்டான காலத்தில் ஸ்ரீ ஜகன்ஞதனே ஓர் கிழத் தச்ச ரூபமெடுத்து வந்ததாகவும், ஸ்ரீ ஜகன்ஞதர், ஸ்ரீ பலபத்திரர், சுபத்திரை இம்மூவர்களுடைய விக்கிரகங்களை மூன்று வாரகாலத்திற்குள் உண்டாக்கிக் கொடுப்பதாகவும் அதற்குள் ஒருவரும் அவைகளைப் பார்க்கக் கூடாதென்றும் அரசரைக் கேட்டுக் கொண்டதாகவும், மூன்றுவாரம் முடிவதற்குள், அரசருடைய மனைவிக்கு ஆத்திரம் பொறுக்காமல், கற்பக்கிரகத்திற்குள்சென்று பார்க்கவே தச்சரூபத்துடன் வேலைசெய்து வந்த ஸ்ரீ ஜகன்ஞதன், தன்னுடைய உருவத்தையும் ஸ்ரீபலபத்திரர், சுபத்திரை இவர்களுடைய உருவத்தையும், அரை குறையாய் விட்டுவிட்டு மறைந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. இக்கோயில் கோபுரத்தின் அடிப்பாகம் 80 அடி அகலமாயும், 192 அடி உயரமாயும் இருக்கிறது குறிப்பிடத்தக்கது.

பூரி அல்லது ஜகன்னாத்

ஸ்ரீ ஜெகன்னாத ரதோற்சவம் :—இந்த க்ஷேத்திரத்தில் பிரதி வருஷமும் ஜூன்மாதக் கடைசியிலும் ஜூலை மாதம் ஆரம்பத்திலும், ரதோற்சவம் ஆரம்பமாகிறது. ரதோற்சவத்திற்கு முந்தி, ஸ்னான யாத்திரை ஆரம்பமாகும். அது 15 நாள் நடக்கும், பிறகு ரதோற்சவம் ஆரம்பம்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, கோகுலத்திலிருந்து மதுராபட்டணத்திற்குத் தம் சகோதரருடன் சென்று அதையாண்டு வந்த கம்சனைக்கொன்று சுகமாக இருந்த காலத்தின் ஞாபகார்த்தத்தை வெளியிடுவதற்காகவே, இந்த ரதோற்சவம் நடைபெற்று வருகிறது என்று காண்க.

ஸ்ரீ ஜெகன்னாத ரதம் :—இந்த க்ஷேத்திரத்தில் கட்டப்பட்டிருக்கும் ரதம் 45 அடி உயரமாயும் 235 அடி சதுரமாயுமிருக்கிறது. இதற்கு 16 சக்கரங்கள். ஒவ்வொரு சக்கரத்தின் சுற்றளவு (7 அடி) மூன்று ரதங்களில் பெரிய ரதம் ஸ்ரீ ஜகன்னாதருக்கும் மற்றிரண்டு சிறிய ரதங்கள் முறையே பலபத்திரருக்கும் சுபத்திரைக்கும் சேர்ந்தவை.

சூரிய பகவான் கோவில் :—ஜெகன்னாதத்திற்குச் சமீபத்தில் (கனராக்) என்னும் ஓர் க்ஷேத்திரம் இருக்கிறது. அதில் சூரிய பகவான் கோவில் ஒன்றுளது. அதைப்போன்ற வேலைத் திறமையான கோவிலைக் காண்பதரிது. அதைப்பற்றி அபுல் பேஜல் என்பவர் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார் :—“ஒரிஸா மாகாணத்தின் 12 வருஷத்திய வரும்படியைக் கொண்டு மேற்கண்ட சூரிய பகவான் கோவில் கட்டப்பட்டது. எதையும் நம்பாதவனும் விநோதக் காட்சியைப் பார்த்து அதிசயம் கொள்ளாதவனும் இத்தலத்திற்கு வந்து இக்கோவிலின் விசித்திரமான வேலைப்பாட்டைப் பார்வையிடுவானேயானால் அவனை அறியாமலே வியப்பும் சந்தோஷமும் உண்டாகாமற் போகாது என்பது திண்ணம். (சுதேசமித்திரன்.)

விகடப்பா.

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா ! அமரர் ஏறே ! திருவரங் கத்துளானே !
இச்சகம் அனைத்தும் வேண்டேன் ! இந்திரபோகம் வேண்டேன்
நிச்சலும் இந்தத் தோசை நேர்ந்திடா தருவாயே (1)

அண்ணனானவன் தம்பிக்கு மூத்தவன் ;
திண்ணை யானது தெருவிற் குயர்ந்தது ;
பண்ணை யானது மூங்கிலின் பண்ணையே ;
எண்ணெ யானது வாணியன், எண்ணெயே. (2)

(பஞ்சாமிர்தம்)

மு ர செ சா லி

நமது நாஷணல் காங்கிரஸ்.

இந்தியன் நாஷணல் காங்கிரசுக்கு அடிகோலியவர்களும் அநேகவருஷத்திய உழைப்பினுல் அதனை ஒரு சக்தியுடைய ஸ்தாபனமாக உருப்படுத்தியவர்களும் ஆகிய மிதவாதிகள் அல்லது நாஷனலிஸ்டு கட்சியார், பிரிந்த பின்னர், உருக்குலைந்து சக்தியற்றுக் குன்றுயிராயிருந்த காங்கிரஸிலே தனக்குவமை யில்லாத் தியாக மூர்த்தியான காந்தியடிகள் புகுந்ததுமுதல் அது புத்துயிர் பெற்றுப் பொலி வுற்றது. பல திறப்பட்ட கட்சியினராயும் பல திறப்பட்ட கருத்துடையவர்களாயும் பிரிந்து நின்ற இந்திய மக்களெல்லாம் ஒரு முகப்பட்டனர். ஆகவே காங்கிரஸ் மிக வலிவுற்றது.

***

காந்தியடிகள் ஒத்துழையாத் திட்டத்தை வெளியிட்டவுடன் காங்கிரஸ்கார ரெல்லாம் ஏகமனதாக ஒப்புக்கொண்டனர். நாட்டின் விடுதலைக்கு ஒத்துழையாமையே ஏற்ற சஞ்சீவியென்று பல்லவி பாடினர்.

***

ஒத்துழையா இயக்கத்தினுல் நாடு விடுதலை பெறுமென்றும், மாறுக, தீமையே அடையுமென்றும் பலர் உண்மையாக நம்பித் தம் கருத்தை வெளியிட்டனர். வெளியிடவே காங்கிரஸ் தலைவர்களெல்லாம் அவர்களை வைதனர்; ராஜ்யத்துரோகிகளெனத் தூற்றினர்.

***

சிறிதுகாலம் நாடெங்கும் ஒத்துழையா முழக்கமே முனைந்து நின்றது. 'கதர்' தொனியே எங்கும் கேட்கலாயிற்று. ஜீவிதப் போராட்டத்திலே தோல்வியுற்று அநாமதேயர்களாய்க் காலந்தள்ளியவர்களிற் பலர் 'கதர்' உடுத்தியும் 'காந்திக்கு ஜே' கூவியும் தலைவர்ப் பட்டம் பெற்றனர். பொதுஜன மத்தியில் அவர்களுக்கு ஒரு போலி மதிப்பும் ஏற்பட்டது. மறியல்வேலை முதலியனவும் தலையெடுத்தன. நாடெங்கும் ஒரு பரபரப்புத் தோன்றலாயிற்று.

***

இத்தருணத்திலே வேல்ஸ் இளவரசர் பெருமான் இந்தியாவுக்கு விஜயமாயினர். காங்கிரஸ்காரர் அவரது வருகையைடம் பஹிஷ்கரித்தனர். இளவரசர் பஹிஷ்கார முழக்கம் சிலநாள் பாரத நாடெங்கும் கேட்கலுற்றது. பலர் சிறை சென்றனர். தேசபந்து தாஸரும் சிறைசென்முர்.

தாஸர் சிறை சென்றதும் "வெற்றி கண்ணுக்குப் புலனாய்விட்டது. மனந்தளரேல்" என நாட்டுக்கு ஒருசெய்தியும் அனுப்பினர். அன்றைய இரவை இந்திய மக்களெல்லாம் பேராவலோடு கழித்தனர்.

***

மறுநாள் புலர்ந்தது. சூரியனும் உதயமாயினன், ஆனால் பழைய உதையமே. புதுமை ஒன்றும் காணவில்லை. வெற்றிக் குறியும் தோன்றவில்லை. இந்தியா பழைய இந்தியா வாகவே இருந்தது.

***

கடைசியாகக் காந்தியடிகளும் சிறை புகுந்தார்.

***

புகவே காற்று மாறி அடிக்க லாயிற்று. ஐவகை பஹிஷ்காரங்களும் பலருக்கு பயனற்றனவாய்த் தோன்றலாயின. சிலர் நூல் நூற்பதினால் இந்தியா சுயராஜ்யம் எவ்வாறு பெறுமெனக் கேட்கலாயினர். காந்தியடிகளின் 'அஹிம்ஸா' கொள்கையைப் பலர் மறைமுகமாகவும் சிலர் நேர்முகமாகவும் தாக்கவும் தலைப்பட்டனர்

***

கடைசியாக 'சுயராஜ்ய'க் கட்சியும் உருப்பெற்றது. தாசரின் வலி மிகுதியால் 'காங்கிரஸ்' அனுக்ரகத்தையும் சுயராஜ்யக்கட்சியார் பறித்துக் கொண்டனர்.

***

எனவே அன்னோர் சட்டசபையிலும் பிரவேசித்தனர், மத்திய மாகாணச்சட்ட சபையை சுயராஜ்யக் கட்சியார் தூளாக்கினர். வங்காளச்சட்டசபையை அலங்கோலப்படுத்தினர். இந்தியச்சட்டசபையையும் சிறிது அசைத்துவிட்டனர். சுயராஜ்யக் கட்சியாரின் வெற்றி முரசும் முழங்சலாயிற்று.

***

இத்தருணத்தில் காந்தியடிகள் சிறைவாசம் நீங்கி வெளிப்போந்தனர். தாம் சிறை புகுந்த நாளத்திய இந்தியாவுக்கும் சிறை மீண்ட நாளத்திய இந்தியாவுக்கும் பெருத்த பேதமிருப்பதாக அடிகளுக்குத் தோன்றிற்று. காந்தியடிகளின் சிறைவாச காலத்தில், சுயராஜ்ய கட்சியாரின் போர் முழக்கத்தினால் ஸ்தம்பித்து நின்ற இந்திய மக்களும் காந்தியடிகள் சிறை மீண்டதோடு விழிக்கலாயினர். மாலுமியை இழந்து மரக்கலத்தோடு கடலில் மூழ்கும் நிலைமையிலிருந்த மரக்கலப் பிரயாணிகள் திரும்பவும் மாலுமியைப் பெற்றால் தமது இரட்சிப்புக்கு எவ்வாறு மாலுமி முகத்தை நோக்குவார்களோ அவ்வாறே இந்தியர்களெல்லாம் காந்தியடிகளின் திருமுகத்தை ஒரேமுகமாக வெகு ஆவலோடு நோக்கலுற்றனர்.

காந்தியடிகளோ தமது பழைய ஒத்துழையாத் திட்டங்களில் தமக்கு நம்பிக்கை குறையவில்லையென்றும் சட்டசபைப் பிரவேசத்தால் சுயராஜ்ய மடைய முடியாதென்றும் முட்டுக்கட்டை ஏற்பாடு தமது அஹிம்ஸா தருமத்துக்கு முரணனதென்றும் நிர்மாணத் திட்டங்களில் முழுமனம் செலுத்துவதே நாட்டாரின் கடமையென்றும் ஒரு செய்தி விடுத்தனர்.

***

இச்செய்தி சுயராஜ்யக் கட்சியாருக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. சுயராஜ்யக் கட்சித்தலைவர்களாகிய பண்டித நேருவும் தேசபந்து தாஸரும் ஜுஹூவில் காந்தியடிகளைக் கலந்து பேசினர். பேச்சு பயனற்றதாகவே முடிந்தது.

***

காந்திபடிகளோ பற்றற்றவர் ; பொன்னிலும் புகழிலும் வெறுப்புற்றவர் : தேசவிடுதலையே அரவது தலையான நோக்கம். அவரது சுற்றுக் காட்சிகளோ விஷத்தன்மை வாய்ந்தனவா யிருக்கின்றன. இந்தியா முழுதும் மாயவலைக்குள் அகப்பட்டிருப்பதுபோல் அடிகளுக்குத் தோன்றிற்று. தோன்றவே அவ்வலையைக் கிறி "நாம் எங்கு நிற்கிறோம். தேசம் எங்கு நிற்கின்றது" எனத் திட்டமாய் அறியும் பொருட்டு அகில இந்திய காங்கிரஸ் கம்மிட்டியின் முன்னிலையில் நான்கு தீர்மானங்களைக் கொண்டுவர முன்வந்தார்.

***

முன்வரவே சுயராஜ்யக் கட்சியார் கூத்தாடத் தொடங்கினர். தமது ராஜீய வாழ்வின் சாவுமணியை அடிகள் அடிக்கத் தொடங்குவதாகக் கணக் கண்டனர். அனைவரும் வேர்த்து விதிர் விதிர்த்து ஆமதாபாத்துக்கு ஓடினர்.

***

காங்கிரஸ் கம்மிட்டியும் கூடிற்று. நான்கு தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன. யாவரும் வந்தவழியே மீண்டனர்.

***

வெற்றி எக்கட்சியாருக்கு? இந்தக் கேள்வி இன்றும் கேள்வியாக இருப்பதாகவே எமக்குத் தோன்றுகின்றது. காங்கிரசுக்குள் பிளவு ஏற்பட்டுவிட்ட தென்கின்றனர் ஒரு சிலர் : ராஜி ஏற்பட்டதென்கின்றனர் வேறு சிலர், காந்திபடிகளோ "தோல்வியுற்றேன் ; தாழ்வுபெற்றேன்" என்கின்றனர்.

***

"உண்மையில் மகாத்மா காந்திபக்கமே பெரும்பான்மை **துணை நின்றது. அது போதிய அளவு கிடைக்கவில்லையே என்று தோல்வி என்கின்றார்"** எனக் கூறுகின்றது **நவசக்தி.**

திரு. ஸ்ரீநிவாஸய்யங்காரோ ஆமதாபாத் தீர்மானங்கள் தமக்கு அதிருப்தியை அளித்துவிட்டதாகவும் அவை கலக்கத்தையும் அர்த்த பேதத்தையுமே உண்டாக்கிவிட்டன வென்றும் தேசத்தாருக்கு எவ்வித நல்வழியையும் காட்டவில்லை யென்றும் துயருறுகின்றார்.

***

"நாம் எங்கு நிற்கிறோம்" என்னும் கேள்விக்கு கர்னாடகத்தில் கூடும் காங்கிரஸிலே விடைபெற முடியுமென்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் அவ்விடையின் முற்குறிகள் இப்பொழுதே தோன்றத் தொடங்கிவிட்டன.

***

வங்காளத்திலுள்ள மாறுதல் வேண்டாக் கட்சியாரெல்லாம் ஒருங்குகூடி அவர்களுக்கென ஒரு புதிய ஒத்துழையாச் சங்கத்தை ஸ்தாபித்திருப்பதாகவும் அச்சங்கத்துக்கு பாபு சயாம் சுந்திர சக்கரவர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும் இச்சங்கம் காந்தியடிகளின் ஆதரவையும் பெற்றுவிட்டதென்றும் தெரிகின்றது.

***

காங்கிரஸ் கம்மிட்டி அங்கத்தினர் அனைவர்களும் தினந்தோறும் அரைமணி நேரம் கை ராட்டினத்தைச் சுழற்றி நூல் நூற்கவேண்டுமென்பதும் அகில இந்திய காங்கிரஸ் கம்மிட்டி மெம்பர்கள் மாதந்தோறும் 2,000 கெஜம் நூல் நூற்கவேண்டும் என்பதும் அங்ஙனம் நூற்காதவர்கள் காங்கிரஸ் நிருவாக ஸ்தானங்களை வகிக்க லாயக்கற்றவர்கள் என்பதும் காந்தியடிகளின் கருத்து.

***

நூல் நூற்பதுதான் சுயராஜ்யக் கட்சியாரை மிக வெருட்டிவிட்டது.

***

ஆனால் கூர்ஜரம் இந்தியாவுக்கு வழி காட்டுகின்றது. இம்மாதம் 11ல் கூடிய கூர்ஜர மாகாண காங்கிறஸ் கம்மிற்றியில் கட்டாயமாக நூல் நூற்பதைப்பற்றிய அகில இந்தியக்கம்மிற்றித் தீர்மானத்தை அந்தக் கம்மிற்றி ஆதரிப்பதுடன் 2,000 கெஜம் போதாதென்றும் 5,000 கெஜம் நூற்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

***

மனச்சாட்சியுடைய பல காங்கிரஸ் நிருவாகஸ்தர்கள் ஆமதாபாத் தீர்மானங்களுக்குட்பட்டு, தமது காங்கிரஸ் நிருவாக பதவிகளிலிருந்து நீங்கியும் வருகின்றனர். காந்தியடிகளின் கட்சிபலம் இவ்வாறாக சுயராஜ்யக் கட்சியாரின் நிலைமையை உற்றுநோக்குவோம்,

பாபு சயாம் சந்திர சக்கரவர்த்தி "சர்வன்று" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார் :—

"காங்கிரஸ் பிரதிநிதிகளில் பெரும்பான்மையோர் சுயராஜ்யக் கட்சியாருடைய முறைகளைக் கண்டிக்கும்போது சுயராஜ்யக் கட்சியார் தான் முதன் முதலாக காங்கிரசின் பிரதிநிதித் துவத்தையும் காங்கிரசின் தீர்மானங்களையும் எதிர்த்துப் புறக்கணிக்க முன்வருகிறார்கள். அவர்களுடைய நோக்கமெல்லாம் அரசியல் நோக்கமே. அவருடைய கட்சி அதிகாரத்துக்கு வந்தால் போதும். இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியிலும் என்ன நேர்ந்தாலும் அவர்களுக்கு அக்கரையில்லை. அவர்களுடைய முறைகளுக்கு ஒழுக்கம் குறுக்கிடும்போது ஒழுக்கத்தைப் புறத்தே தள்ளிவிடுகிறார்கள். தாம் போகிற வழி சரியான வழியா தவறான வழியா என்று அவர்கள் கவனிக்கிறதே கிடையாது. எவ்வழியாயினும் அவர்கள் காரியம் நிறைவேற வேண்டும். அரசியல் அவர்களுக்கு ஒரு விளையாட்டே. ராஜ்ய தந்திரமும் சபடமும் அவர்களுக்கு முக்கியம். அவருடைய வேலைத் திட்டங்களும் முறைகளும் அடிக்கடி முரண்படுவன. தேர்தலின் போது குடிகளிடம் ஒருவேலைத் திட்டத்தைக் காட்டிவிட்டு பின்னர் அத்திட்டத்தை அறவே மாற்றிக்கொள்ள கொஞ்சமும் அவர்கள் தயங்குவதில்லை."

***

மாஜி ஹைக்கோர்ட்டு ஜட்ஜி ஸ்ரீமான் T. V. சேஷகிரி அய்யரவர்கள் 'சுயராஜ்ய'க் கட்சியாரைப்பற்றி 'பஞ்சாமிர்தத்தில்' எழுதியிருப்பதாவது :—

"எலக்ஷன் சமயத்தில் அவர்கள் எழுப்பிய 'தடை' என்ற வீரம் பொருந்திய யுத்தத் தொனி இப்பொழுது 'துரைத்தன அதிக்கிரமத்தை எதிர்த்தல்" என்று மெலிந்துவிட்டது. எலக்ஷன் சமயத்தில் அவர்கள் செய்த ஆர்ப்பாட்டமெல்லாம் ஜனங்களை மயக்குவதற்காகத்தான் என்ற முடிவை எதிர்க்க முடியாது. அவர்களின் நல்லதிர்ஷ்டம் பத்திரிகைகள் எல்லாம் அவர்கள் புகழையே பாடுகின்றன................அவருடைய (காந்தியடிகளின்) சிஷ்யர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களே அவருக்குத் துரோகஞ்செய்து விட்டார்கள்.........அவர் சிறைச்சாலை சென்ற நிமிஷமே அவரையும் அவர் கொள்கைகளையும் அவர்கள் துறந்துவிட்டு ஜனங்களுக்குப் புதுப் போதனையைச் செய்து வந்தனர். அவர் கொள்கைகளுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் மாறாக நடந்து கொண்டும் அவரிடம் மெய்யன்பு பூண்டிருப்பதாக அவர்கள் செப்பியதும் இந்நாட்டில் அநேகரை நம்பும்படி செய்து விட்டது."

***

"நேயர்களே! பொதுவாக உலகை, சிறப்பாக நமது இந்தியாவைத் தூய்மைப்படுத்தவந்த ஒரு பெரியார் "தோல்வியுற்றேன். தாழ்வுபெற்றேன் "என்று கலங்குகிறார். அவர் அஹிம்ஸாதர்மம்

அழிகிறதே என்று அலமருகிருர், சத்தியம் சாய்கிறதே என்று கதறுகிருர். அவர் கண்ணீர் விடுவதைக்கண்டு தர்மதேவதையும் கண்ணீர் விடுகின்றது. இந்திய மக்களே! நீங்கள் என்னசெய்யப் போகிறீர்கள்? தர்மத்துக்குத் துணை நிற்கப் போகிறீர்களா? அதர் மத்துக்குத் துணை நிற்கப்போகிறீர்களா? நாம் எங்கே நிற்கிருேம்? என்பதைச் சிந்தியுங்கள்" என்று நவசக்தியைப் போல் நாமும் விண்ணப்பஞ் செய்கின்ருேம்.

***

ஆனிபெஸன்ற்று அம்மையார் காங்கிரஸ் அக்கிராசனம் வகித்த பொழுது காங்கிரஸ்காரர் கர்ப்பூர ஆராத்தியெடுத்து வழிபட்டனர்; தேவார மோதித் துதித்தனர்; திருப்பல்லாண்டு பாடி வாழ்த்தினர். பின்னர் பெஸன்றம்மையார் பெயரும் அன்ருேருக்கு வேப்பங்காயாய் விட்டது. இப்பொழுது காந்திபடிகளையும் அன்னோர் கைவிடத் துணிகின்ருர். ஆனல் தேசம் அப்புனிதரைக் கைவிடுமோ என்பது தான் கேள்வி. அம்மம்ம! இந்தியாவிலே ராஜீய வாழ்க்கையின் போக்கு மிக விசித்திர மானதே.

***

தயிரினல் உண்டாகும் நன்மை

சதா தயிர் உபயோகப்படுத்து வதனல், அநேக ரோகங்களை உண்டாக்கும் கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளை நாசஞ் செய்யக் கூடிய சக்தியதனலுண்டாகுமாம்.

***

வழுக்கைத் தலைக்கு

தலையில் உரோமம் முளைக்காமல் பூச்சிவெட்டுள்ள இடங்களில் பூசினிக்கொடியின் தளர்ந்த இலையைத் தேய்த்து வந்தால் சீக்கிரத்தில் உரோமம் முளைக்குமாம்.

***

அமெரிக்காவில் டால்பியா நகரில் ஒரு கோழிக்காட்சி நடந்தது. அதில் ஒரு கனவான் பெட்டைக் கோழி யொன்றை 2400 பவுனுக்கு வாங்கினுராம். அது அழகிய நடையும் பஞ்சவர்ணமும், இன்பமான குரலோசையு முடையதாம்.

***

கப்பலொன்றிலே வேலை செய்த ஹலண்டு தேசவாசியான ஓர் வெள்ளையனின் நிறம் ஆறுமாசகாலமாய்ச் சிறிது சிறிதாகக் கறுப்பாகிவந்து இப்போது முழுவதும் இருண்ட கறுப்பனுகி விட்டானும். இந்தமாறுதலின் காரணம் தகுந்த வைத்தியராலும் அறியப்பட வில்லையாம்.

விசேஷக் குறிப்புகள்

கபிரியேல் பெற்ட்ருண்டு என்னும் ஓர் சாஸ்திரி பட்டுப் பூச்சிகள் இயற்கையிலேயே வர்ணமிட்ட பட்டுகள் கொடுக்கும் பொருட்டு பட்டுப்புழுக்களுக்கும் அவற்றின் கூடுகளுக்கும் சாயமூட்டிப் பரிக்ஷித்து சித்திபெற்றிருக்கிறார்.

***

சென்ற 1923-ம் வருஷத்தில் மட்டும் இந்தியாவிற்கு 6704 மோட்டார்வண்டிகள் வந்திருக்கின்றன. இதனால் சுமார் பதினேழு லட்சரூபாய் வெளியேறி யிருக்கிறது.

***

இலங்கையிலுள்ள காடுகளில் வாழ்ந்து வரும் வேடர்களுக்குச் சிரிப்பு என்பதே தெரியாதாம். சமீபத்தில் ஓர் அறிஞர் அவர்களில் சிலரைச் சந்தித்து அவர்களைச் சிரிக்கச் செய்யுமாறு எத்தனையோ முயற்சிகள் செய்தும் பயனில்லையாம். இந்த வேடர்கள் தான் இலங்கையில் ஆதியில் இருந்த ஜாதியார்கள். அவர்கள் நாட்டை வட இந்தியாவிலிருந்து சென்ற சிங்களவர்களும், தென்னாட்டிலிருந்து சென்ற தமிழர்களும், மற்ற அந்நியர்களும் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் இந்தக்கதை அந்த வேடர்களுக்குத் தெரியாது.

***

ஸ்ரீ பாரதி வித்தியாலயம்

காலஞ்சென்ற தேசியக்கவி சுப்ரமண்ய பாரதியாரின் ஞாபகார்த்தமாக ஸ்ரீமான் பி. வி. ராஜகோபாலாச்சாரியவர்கள் புதுவையில் ஸ்ரீ பாரதி வித்யாலயத்தை ஸ்தாபித்திருப்பதாக அறிந்து மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டி" ஸ்தாபனம் பெற்றிருக்கும் இவ் வித்தியாலயத்தை ஆதரிக்கவேண்டியது தமிழுலகத்தார் கடமையே. உதவிசெய்ய விரும்புவோர் பணமாகவும் நூல்களாகவும் அனுப்பலாம்.

***

திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் நெய்தற்றொழிலைப் பற்றி எழுதிய ஒரு வியாசத்தில் பின் வருமாறு கூறுகிறார்கள். "இந்தியாவில் நெய்தற்றொழிலுக்கு நிலைக்களனா யிருந்தது டாக்கா நகரம். அது மிகச் சிறிய நகரம். 18-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அதன் ஜனத்தொகை இரண்டு லட்சம். அவ்வளவு ஜனத்தொகை கொண்ட அச்சிற்றூர் 1787-ம் ஆண்டில் சுமார் முப்பது லட்சம் ரூபா பெறுமான சல்லாத் துணி இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தது. 1817-ம் ஆண்டில் அவ்வேற்றுமதி நின்றுவிட்டது. ஜனத்தொகை எழுபத்தொன்பதினாயிரமாகக் குறைவுற்றது. இவ்வாறு ஹென்ரி காட்டன் எழுதியிருக்கிறார். டாக்காவின் வளம் குறைவுற்றதற்குக் காரணமென்னை? கிழக்கிந்திய கூட்டத்தார் தலையீடேயாகும்.

விசேஷக் குறிப்புகள்

பாடலி புரத்தில் ஏறக்குறைய முப்பத்து மூன்று லட்சம் மக்கள் வாழ்ந்தார்களென்றும், அவருள் மூன்று லட்சம் பேர் நூல் நூற்றாரென்றும் டாக்டர் பிரான்ஸிஸ் புச்னன் சொல்லியிருக்கிறார். மற்றும் பல் சரித்திரக்காரர்களெழுதியதை நோக்குழிப் பதின் மருள் ஒருவர் நூற்றும் செய்தும் வந்தார் என்பது பெறப்படுகிறது.

***

கவிக் சக்ரவர்த்தியான ரவீந்திரநாத் தாகூர் சைனாவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார். இவருக்கு சைனா முழுவதும் நன்கு உபசாரம் நடைபெற்றது. சாந்திநிகேதனத்தில் ஆறு வாரம் தங்கிவிட்டு பிறகு ஸ்பெயின் தென் அமெரிக்கா முதலிய பிரதேசங்களுக்குச் செல்வாராம். திரும்பி வரும் வழியில் இதலி முதலிய பிரதேசங்களுக்குப் போவாரென்று தெரிகிறது. "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு."

***

உலகத்திலேயே மிகப்பெரிய பன்றி ஒன்று ஆஸ்திரேலியாவில் இருக்கிறதாம். இதன் எடை 1188 பவுண்டு; இதன் நீளம் 8 அடி மூன்று அங்குலம்; உயரம் மூன்று அடி ஒன்பது அங்குலம்; இதன் வயது இருபத்தைந்து மாதம். இது பார்வைக்கு ஒரு பெரிய நீர் யானை போலிருக்கிறதாம்.

***

மாஜி கலிபாவும் மாஜி துருக்கி சுல்தானுமான அப்துல் மஜீது அவர்களுக்கு ஐதராபாத் நிஜாம் அவர்கள் மாசம் 300 பவுன் கொடுப்பதாகச் செய்த ஏற்பாட்டுக்காக நன்றி பாராட்டி சுல்தான் அவர்கள் ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்.

***

தற்போது டைப்ரைடர், என்னும் இயந்திரத்தைக்கொண்டு எழுத்துக்கள் அச்சடிக்கப் படுகின்றன. அதேமாதிரி வார்த்தைகளாக அச்சடிக்கக்கூடிய ஓர் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறதாம். பேசும்போதே அந்த இயந்திரத்தில் அச்சடித்துவிடலாம் என்று சொல்லப்படுகிறது.

***

கோலாலம்பூரில் ரப்பர்ப் பாலிலிருந்து ஒருவிதத் தைலம் வடிக்கிறார்களாம். இதனால் மோட்டார் வண்டி ஓட்டலாமாம்.

***

மக்கா மதினா முதலிய புண்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்ற மூன்று மாதங்களில் பத்துக்கப்பல்களில் முஸ்லிம்கள் போயிருக்கிறார்கள். ஆண்கள் 5211. பெண்கள் 901. குழந்தைகள் 92.

பூமி மட்டத்திற்கு 20,000 அடி உயரத்தில் சென்றால் மனிதனுடைய தேக மனோ நிலைமைகள் எவ்வாறிருக்கும்? இக்கேள்விக்கு லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒருவர் பின்வருமாறு விடையளித்திருக்கிறார் :—பூமிக்குமேல் உயரமாகச் செல்லச்செல்ல பிராணவாயு குறைந்துவருகிறது. கடல் மட்டத்தில் இருக்கும் பிராணவாயுவின் அளவில் 100-க்கு 11 வீதந்தான் 16,000 அடி உயரத்தில் பிராண வாயு பரவி யிருக்கிறது. ஆதலால் மனிதன் மேலே போகப்போக தேவையான பிராண வாயுவை உட்கொள்ளுவதற்காக மிகவும் வேகமாய் மூச்சுவிட வேண்டியிருக்கிறது. மலை உச்சிக்குச் சென்றாலும் ஆகாய விமானத்தில் பறந்தாலும் ஒரேவிதமான பலன்கள் தான் ஏற்படுகின்றன. 20,000 அடி உயரத்தில் மிகவும் பிரயாசையுடன் மூச்சுவிட வேண்டி யிருக்கிறது. நாடி அதிவேகமாய் ஓடுகிறது. ஹிருதயம் படபடவென்று வெகு வேகமாய் அடித்துக்கொள்கிறது. மார்பு அடைத்துக் கொள்ளும் போல் உணர்ச்சி ஏற்படுகிறது. சில மணி நேரத்திற்கெல்லாம் கடுமையான தலைவலி உண்டாகிறது. பின்னர் மயக்கம், பசியின்மை. அத்துடன் எத்தகைய உழைப்புக்கும் தேகத்தில் வலிமை இன்றிப் போய் விடுகிறது. மனதில் ஏற்படும் மாறுதலே எல்லாவற்றையும் விட விநோதமானது. நான் ஆகாய விமானத்தில் 20,000 அடி உயரத்தில் சென்றிருந்தபோது டைப் அடிக்கும் இயந்திரம் ஒன்று என் எதிரில் இருந்தது. அதைச் செய்தவரின் விலாசம் அதன் மேல் எழுதப்பட்டிருந்தது. ஆனால் பல முறைகளில் அது என்ன பாஷையில் எழுதப் பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியாமல் போயிற்று. எழுத்துக்கள் புரியவேயில்லை. கோபம் அதிகமாக வந்தது. மேல் தோல் எங்கும் அரிப்பு எடுத்தது. சொற்பத்தின் பலனாக களைப்பு ஏற்பட்டு கைகால் அசைவற்றுப் படுத்து விட்டேன். பூமியில் நூறு கஜம் ஓடுவதினால் ஏற்படும் களைப்பு 20,000 அடி உயரத்தில் கைகாலை அசைப்பதினால் ஏற்பட்டு விடுகிறது.

"நவசக்தி."

***

ரேடியத்தின் உதவியால் வைரத்தை மரகதப் பச்சையாக மாற்றி விடலாமாம். அமெரிக்காவில் இந்த வேலை செய்கிறார்கள்.

***

செங்கோட்டைக்கும் பகவதிபுரத்துக்கும் இடையில் எரிமலை வெடிப்பினால் பூமி அதிர்ச்சியுண்டாகி ரெயில்பாதையில் பெரிய சேதமுண்டாயிருக்கிறது. பாதை சரியாக இரண்டு மாதம் பிடிக்குமென்று சொல்லப்படுகிறது.

***

தேக சுகத்தின்பொருட்டு காந்தியடிகள் இத்தாலிதேசத்து மெண்டோலா என்னும் சுகவாசஸ்தலத்தில் மூன்று வாரம் தங்கப் போவதாகத் தெரிகிறது.

விசேஷக் குறிப்புகள்

இலங்கை சுவர்ண விலாச சபை.

மூன்ருவது வருடத் திருவிழா.

இம்மாதம் 8-ம் திகதி மாலை 5 மணிக்கு மேற்படி சபையின் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு சபையின் முழு அங்கத்தவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். அக்கிராசனர் அவர்களுக்கு சமுகந்தர சாத்தியப் படாததின் நிமித்தம் ஸ்ரீமான் V. S. ஏகாம்பரம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் கடவுள் துதியுடன் நடை பெற்றது. காரியதரிசியாலும், பொக்கிஷாதிபராலும் கடந்த வருடத்தின் குறிப்புரைகள் வாசிக்கப்பட்டுக் கீழ் காணும் உத்தியோகஸ்தர்களை நான்காம் வருடத்திற்கு நியமனம் செய்யப் பட்டது :—ஸ்ரீமான்கள் S. R. குமாரசாமி (Proctor), அக்கிராசனர் V. S. ஏகாம்பரம், M. கனகரெத்தினம் உப அக்கிராசனர்கள், N. சேதுபதி காரியதரசி, V. ஏரம்பு உபகாரியதரசி, M. கிருஷ்ணசாமி பொக்கிஷாதிபர், T. S. R. நாயுடு, S. கந்தையா உப பொக்கிஷாதிபர்கள், R. சிற்றம்பலம் நாடகத்தலைவர், P. J. வின்ஷன்ற் கணக்குப் பரிசோதகர். நாடக நிர்வாக சபைக்கு இன்னும் இரண்டு நாடகத் தலைவர்களும் நியமனம் செய்யப் பட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலும் இரு வாசகசாலை ஏற்படுத்தி அதற்கு இரு அக்கிராசனர்களும், இரு காரியதரசிகளும், ஓர் வாசக மண்டபத் தலைவரையும் நியமனம் செய்யப்பட்டு உறுதி பண்ணப் பட்டது. அத்தோடு பதினேழு நிர்வாக சபை அங்கத்தினர்களையும் தெரிவு செய்யப்பட்டு இறுதியாக கடவுள் வாழ்த்துதலுடன் முடிவு பெற்றது.

மேற்படி திகதியன்று காலை ஒன்பது மணியளவில் கடந்த வருடத்து உத்தியோகஸ்த்தர்களும் அங்கத்தவர்களும் ஒருங்கு சேர்ந்து ஸ்ரீமான் S. R. குமாரசாமி (Proctor) அவர்களுடன் ஓர் புகைப்படம் எடுக்கப்பட்டது.

***

ஜெர்மனியில் மெயின்ஸ் பட்டணத்துக் கோவிலிலுள்ள கடிகாரத்திற்கு 500-வருஷத்திற்கு ஒரு முறை தான் சாவி கொடுக்கிறார்களாம்.

***

பூமியில் உள்ளவர்களில் மூன்றில் ஒரு பகுதியார் அரிசி சாப்பிடுகிறார்கள்.

***

இங்கிலாந்தில் கல்விக்காக ஒரு அணச் செலவிட்டால் குடிக்காக எட்டு அணச் செலவாகிறதாம்.

மிருகங்கள் பேசினுல்

உலகத்திலுள்ள மிருகங்களும் பட்சிகளும் பேசும் சக்தி பெற்றிருந்தால் அவை எத்தனேயோ காலத்திற்கு முன் நடந்த விஷயங்களே யெல்லாம் நமக்குச் சொல்லக்கூடும். இராமர் காலத்தில் இருந்த மிருகங்களிலும் பட்சிகளிலும் சில பாரத காலத்தில் இருந்தவை சில இக்காலத்தில் இருத்தல் கூடும்.

ருஷியாவிலுள்ள கழுகுகள் பேசக் கூடுமானுல் நெப்போலியன் முன் 1812-ம் வருஷத்தில் ருஷியாவின் மீது படையெடுத்த காலத்தில் மாஸ்கோவிலிருந்து துரத்தப்பட்ட பொழுது ஒவ்வொரு பிரஞ்சு வீரனும் களேப்பினுல் சோர்வடைந்து வீழ்ந்து உயிர்துறந்த காட்சியைத் தாங்கள் மரங்களில் உட்கார்ந்து கொண்டு குரூரமான கண்களால் பார்த்துக் கொண்டிருந்த விஷயத்தை இன்றும் ஞாபகத்தில் வைத்திருத்தல் கூடும். ஏனெனில் கழுகுகளோ யுகக் கணக்காய் வாழ்ந்து வருகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன.

நமது நாடு சுதேச மன்னர்களாலும் நவாப்புகளாலும் ஆளப்பட்டுச் சீரும் சிறப்பும் பெற்ருேங்கிய காலத்தில் முதலாவது இங்கிலீஷ் வியாபாரிகள் இந்தப் புண்ணிய பூமியில் கால்வைத்த விஷயத்தைக் கண்ட முதலேகள் சில இன்னும் நமது நதிகளில் வாசஞ் செய்கின்றன. 1415-ம் வருஷத்தில் இங்கிலீஷ்காரர் பிரான்சின் மீது படையெடுத்துச் சென்ற பொழுது பிரான்சையடுத்த கடல்களில் சஞ்சரித்த திமிங்கிலங்கள் இன்னும் உயிரோடு வாழ்கின்றன. 100-வருஷத்திற்கு முன் நடந்த சரித்திர விஷயங்களே நமக்குச் சொல்லக் கூடிய யானேகள்பல இப்பொழுதும் இருக்கின்றன. ராவென் பட்சி 200-வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்களேச் சொல்லக் கூடும்.

பட்சிகளேப் பற்றிக் கவனித்தால், கிளி, காகம், அன்னம் முதலியவை அவற்றிற்கு இடையே ஆபத்து நேராவிடின் 100-வருஷம் வரை உயிர்வாழும். குள்ள வாத்துக்கள் 50-வருஷம் வரை உயிர்வாழும். புரு, நாரை, மயில் முதலியன 20-வருஷம் உயிர் வாழ்கின்றன. வானம்பாடிகள் 15-முதல் 18-வருஷம் வரை உயிர் வாழ்கின்றன. ஆனுல் உலகத்தில் தோன்றிய அன்றே மரணம் அடையும் பிராணிகளும் உண்டு.

***

திருவனந்தபுரம் பகுதியில் சிறையின்கீழ் என்ற ஊரில் ஓர் ஈழுவப் பெண்ணுக்குப் பிறந்த பிள்ளேக்குத் தலே மிருகம் போல் இருக்கிறதாம். நாசிக்குப் பதில் இரண்டு பெரிய துவாரங்கள் இருக்கின்றனவாம்; வாய் மிருகத்தின் வாய்போல் இருக்கிறதாம்; வரிப்புலி போல உடம்பெல்லாம் புள்ளியாயிருக்கிறதாம்; பிள்ளே ஆணு பெண்ணு என்பது தெரியவில்லேயாம்.

விசேஷக் குறிப்புகள்

சிந்து நாட்டில் பசு வளர்ப்புப் பண்ணைகள் செம்மையாக நடை பெறுகின்றன. அங்கே ஒரு பசு 300 நாளில் பதினாயிரம் பவுண்டு பால் கொடுத்திருக்கிறதாம். கராச்சிப் பசுக்கள் இந்த நாட்டில் மட்டுமல்ல, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே சிறந்தவை யென்று சொல்லுகிறார்கள்.

***

பச்சை வசம்பை நல்ல பாம்பி னிடம் காட்டினால் பிரக்ஞை யற்றுக் கிடக்குமாம். மேலும் பச்சை வசம்பின் காற்றானது எவ்வளவு தூரம் பரவுகின்றதோ அவ்வளவு தூரம் நல்ல பாம்புகள் வசிக்கா வாம்.

***

ஜப்பானில் மீனை உயிருடனேயே விற்பார்களாம்; உயிரற்ற மீன்களை விற்பாரும் கொள்வாரும் இல்லையாம்.

***

"டைம்ஸ்" பத்திரிகையின் ஹாம்பர்க் நிருபர் எழுதுவதா வது:—ஹால்ஸ்டின் என்னுமிடத்தில் பசுவிற்கு ஆடு பிறப்புவிக்கச் செய்யப்பட்ட முயற்சியின் திருப்திகரமான பலன் கிடைத்திருக் கிறது. பசு 450 பவுண்டு கனமுள்ளது. அது ஒரு ஆட்டுக்குட்டி போட்டிருக்கிறது. அது 160-பவுண்டு கனமிருக்கிறது இப்பொழுது அந்தக்குட்டி போட்டு 5 வாரங்கள் ஆகின்றன. அது 30 அங்குலம் உயரமிருக்கிறது. பசுவைப் போலவே குட்டியின் தேகம் பருத்து நேர்த்தியாக விருக்கிறது. தலை கால் எல்லாம் ஆட்டைப்போலவே யிருக்கிறது. மேலெல்லாம் அடர்த்தியாகக் கறுப்பு மயிர் இருக்கி றது. இக்குட்டி 31 வாரங்கள் கர்ப்பத்தி லிருந்திருக்கிறது. சாதா ரணமாகக் கன்றுக்குட்டிகள் 40 வாரங்களும், ஆட்டுக்குட்டிகள் 22 வாரங்களும் கர்ப்பத்தி லிருப்பது வழக்கம்.

***

துளசிச்செடியை ஒவ்வொரு வீட்டிலும் வைத்துப் பயிர்செய்வ தினால் குளிர் சுரத்தை நாடவொட்டாதென ஆங்கிலேய வைத்தி யர்கள் கூறுகின்றனர்.

***

காபி, டீ முதலிய பானங்கள் செய்வது நீர் வியாதி முதலிய பல ரோகங்களுக்குக் காரண மெனச் சொல்லுகிறார்கள்.

***

வெம்பிலிக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களின் மொத்த மதிப்பு 12,000,000 பவுனும். ஆபரண மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த ஓர் வைரம் மாத்திரம் 40,000 பவுனும். ஏனைய முத்துக்களினதும் இரத்தினங்களினதும் விலை மதிப்பு 30,000 பவுனும். இலங்கை அலங்கார மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த முத்து அட்டிகையின் விலை 40,000 பவுன். இக்காட்சியின் பொருட்டு ஆப்துல்கபூர் என்பவரால் கொண்டு போகப்பட்ட ஆபரணங்களில் விலை மதிப்பு 1,000,000 பவுனும்.

மதிப்புரை

மூருகவேள் பனுவல் திரட்டு :—முருகக்கடவுள் மீது மெய்யடியார்கள் பலரால் பாடப்பெற்ற திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தபுராணம், திருத்தணிகைப் புராணம் ஆதியான 24 பனுவல்களிலிருந்து திரு. வி. உலகநாத முதலியாரவர்களால் திரட்டப்பெற்றது இந்நூல். 216 பக்கங்கொண்டது. நல்ல கடிதத்தில் சுத்தப் பதிப்பாக அழகுபெற அச்சிடப்பட்டது. சுப்பிரமண்ய பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. ஸ்டிப்பைண்டு விலை அணா 12. காலிகோ பைண்டு ரூ. 1. வேண்டுவோர் முருகவேள் புத்தகசாலை, 8, அம்மையப்ப முதலி வீதி இராயப்பேட்டை சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சோமசுந்தரம் அல்லது சுகந்த விலாச ரகசியம் :—இது ஸ்ரீமாந் செல்வராஜ செட்டியார் பி.ஏ., எல்.டி., எழுதிய ஒரு அற்புதமான துப்பறியும் நாவல். அழகிய நடை விலை ரூ. 1.

ஞானனந்தன் :—ஒரு அருமையான நாவல். மூன்று ஆப்டோன் படங்களுடையது. விலை அணா 12.

தனபாக்கியம் :—ஒரு அநாதப் பெண்ணைப் பற்றிய கதை 160 பக்கங்கொண்டது. விலை அணா 10. இம்மூன்று புத்தகங்களும் செல்வம் அண்டு கம்பெனி 480 சில்வர் தெருவு, பறங்கிமலை என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

சங்க சிந்தாமணி.

தலை இடை கடை யெனப்படும் மூன்று சங்கங்களிலும் தோன்றிய நூல்களில் காணப்படும் சரித்திரம் அனைத்தையும் தொகுத்துச் சுருக்கி விளக்கிக் கூறும் ஒரு அழகிய சிறு நூல். அகநானூற்றுப் பதிப்பாசிரியர் ஸ்ரீமாந் வே. ராஜகோபாலய்யங்கார் அவர்களால் யாக்கப் பெற்றது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பட்டது. தமிழ் கற்க விரும்புவோ ரெல்லாம் அவசியம் வாசிக்க வேண்டிய நூல். வேண்டுவோர் மைலாப்பூர் கம்பர்விலாஸத்தில் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் விலை அணா 12.

ஆங்கிலம்.

கற்காதவர்கள் அரை மனிதர்களே. ஆகவே ஆங்கிலம் கற்றுக் கொள்வதற்கு அனுகூலமாகத் தோன்றுவன வெல்லாம் ஆதரிக்கத் தக்கனவே. வீட்டிலேயே இருந்து, நடத்திவரும் தொழிலுக்கு யாதொரு தடையுமின்றி, தபால் மூலமாக ஆங்கிலங்கற்றுக் கொள்ள விருப்பமுடையவர்கள், திருவனந்தபுரம் புத்தன் சந்தை எளியோர் ஆங்கில பாடசாலை, காரியதரிசி ஸ்ரீமாந் S. சதாசிவம் பிள்ளையவர்கள் B. A., பேருக்கு எழுதி விவரம் அறிந்து கொள்ளலாம்.

புதிய நாவல்! வெளியாய் விட்டது!!

தனபாக்கியம்

அல்லது

தாய் தந்தையற்ற பெண்

(மிஸ்டர் ஏ. டேவிட் இயற்றியது)

இது ஓர் அற்புதமான நாவல். பழிபாவத்துக் கஞ்சாத பாதகியான "அமிர்தவல்லி" என்பாள் தன் நாத்தி மகளாகிய "தனபாக்கியம்" என்னும் தாய் தந்தையற்ற குழந்தையைக் கொல்லக் கருதி அதைக் கொலையாளரிடம் ஒப்புவிக்க, அது "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்றபடி கொலைக்குத் தப்பி, நல்ல இடத்திற் சேர்ந்துவளர, "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதற் கிணங்க ஷை அமிர்தவல்லியின் அருமை மகனே அவலமாய்ச் சாதல்; அதுகண்டு அவள் ஆருத்துயரங் கொண்டு தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல்; ஷை கெட்ட செயலுக்கு உதவியாயிருந்த "வெள்ளைப் புடவைக்காரி" யென்பவள் வெளி வேஷங்காட்டி வெகு சாமர்த்தியமாக வேலை செய்த போதிலும் கடைசியில் "துஷ்டர்களுக்குத் தண்டனை தப்பாது" என்பதற் கொப்ப அவள் அவமானமும் தண்டனையும் அடைந்த விதம் முதலிய விருத்தாந்தங்கள் ஷை புத்தகத்தில் எளிய தமிழில் இனிமையாய் விளக்கப் பட்டிருக்கின்றன. நீதி நெறிகள்பல நிதர்சன மாகக் காட்டப் பட்டுள்ள அருமையான நாவல். பெரியவர்களே யன்றிச் சிறுவரும் சிறுமிகளும் சிறிதும் சங்கோசமின்றி தாராளமாக வாசித்து நற்பயனடையக் கூடிய நல்ல நாவல். இத்தகைய நாவல் இதுவரையில் வெளிவந்திலது. நாவல் வாசிக்கப் பிரியப் படுபவர்கள் இத்தகைய நாவல்களையே வாங்கி வாசித்தல் வேண்டும். **விலை அணா 10. தபால் கூலிவேறு.**

2-ம் பதிப்பு! 2-ம் பதிப்பு!!

ஞானனந்தன்

அல்லது

பிரளயத்தில் கண்டெடுத்த பாலன்

(மிஸ்டர் ஏ. டேவிட் இயற்றியது)

இது ஓர் இனிமையான செந்தமிழ் நாவல். இதைக்கையி லெடுத்தால் முடிக்கும் வரையில் பூமியில் இட எவர்க்கும் மனமிராதென்றால் இதில் எவ்வளவு தூரம் இன்சுவை பொருந்தியுள்ள தென்பது நன்குவிளங்கும். கதா நாயகன் கதாநாயகியின் உருவப்படம் முதலிய மூன்று அழகிய ஆப்டோன் படங்களுடையது. **விலை அணா 12. தபால் கூலிவேறு.**

SELVAM & CO.,
480, SILVER STREET
St. Thomas Mount.

செல்வம் அண்டு கோ.,
480, சில்வர் தெரு,
பரங்கிமலை.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் "ஞான திருஷ்டிக் கண்ணாடி" யென்னும் உபாயக் கருவியுடன் இப்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதருஸ்.

ஜெர்மன் வைரக் கம்மல்.



அசல் வைரத்தையும் தோற்கடிக்கும் 7-கமலங்களுடனும் (Dimond-Extra) சவரன் பொன்னுக்குச் சமமான ஒருநாளும் கறுக்காத கனடியன் பொன்னால் மிகவும் இலக்ஷணமாயும் உறுதியாயும் செய்யப்பட்டவை. ஸ்திரீகள் அணிந்துகொள்ளும் பெரிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 4. ஆண்பிள்ளைகளுக்குக் கடுக்கனும், சிறு பெண்களுக்கு கம்மலாயும் உபயோகிக்கக்கூடிய சிறிய சைஸ் ஜதை 1-க்கு விலை ரூ. 3. தபால் கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பெனி, 22-வது பீட், மதராஸ்.

தங்கடைல் உள்ள விசித்திர பட்டைகள் தீர்த்த கீல் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரங்கள்.

வெது ஆச்சரியம்! வெது நயம்!! முந்துங்கள்!!



இக்கெடியாரத்தில் மணிகாட்டும் டைலின் பேரில் பளபளப்பான (பொன்) தங்கஙில்ட் உள்ளது. எத்தனை வருஷமானாலும் டைலின் பேரில் உள்ள தங்கநிறம் போகாமலே இருக்கும். கெடியாரத்தின் சுற்றியுள்ள பிசிலின்மேல் ஆச்சரியப்படக்கூடிய பலவிதமான விசித்திர பட்டைகள் தீர்த்துள்ளது. இருபக்கம் உள்ள வளையங்கள் இரண்டும் எப்பக்கமும் திரும்பக்கூடிய அழகிய அற்புதமான கீல் வளையங்களுள்ளது. இதன் பெருமை வாங்குகிறவர்களுக்குத்தான் தெரியும். இதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் இதை வாங்காமலிருக்க மாட்டார்கள். கெடியாரம் வெகுகாலம் போகும்படி உயர்தர சாமான்களால் செய்யப்பட்டது. சரியானகாலமும் காட்டக்கூடியது. ஆயிரக் கணக்காய் செலவாகிறது. சீக்கிரம் முந்திக்கொள்ளுங்கள். இதில் பலமாதிரியான தினுசுகள் உண்டு.

நெ. தங்கடைலும் பொன்கிள்ட் விசித்திர பட்டைகள் தீர்த்த கீல் வளையமுள்ள ரிஸ்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. 8—8—0.

பெரிய கேட்லாக்கு வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

விலாசம் :—ஜெனரல் இண்டியன் வாட்ச் டிபோ,

சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும்
செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிடவேண்டிய விவரங்களுக்கு
எழுதவும்.

மானேஜர்:—வெஸ்ட் அண்டு கோ.,
மவுண்ட் ரோட், : : சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா என்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷ்தசாலை, எழும்பூர், மதராஸ்.

Our Tamil Books Department

தங்களுக்கு வேண்டிய சகல வித தமிழ் புஸ்தகங்கள் நாவல்கள், வேதாந்த நூல்கள், இலக்கண இலக்கியங்கள், புராண இதிஹாஸங்கள் முதலியனயாவும் எங்களிடம் கிடைக்கும். பெரிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

சில வேதாந்த நூல்கள்

	ரூ.	அ.
தாயுமானவர் பாடல் மெய்கண்ட விருத்தியுரையுடன்	4	0
பட்டணத்துப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய ப்ரபந்தத் திரட்டின் விருத்தியுரை ...	3	8
விநோதரஸமஞ்சரி	2	0
பரமபதமார்க்கம்	8	8
தேவிபராக்கிரமம்	1	4
சங்கீத ஞான பூஷணி	3	0
திருமுறைத் தேவாரத் திரட்டு ...	2	8
உ. வே. சாமிநாதய்யர் இயற்றியவை.		
சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை ...	10	0
மணிமேகலை	6	4
புறநானூறு	5	10
சிலப்பதிகாரம்	8	12

முக்கிய அறிவிப்பு.

"கிராம வாழ்க்கை" சந்தாதார்களுக்கு தபால் சார்ஜ் இல்லாமல் புஸ்தகங்கள் அனுப்பப்படும். ஒரு தடவையில் ரூ. 30 பெறுமான புஸ்தகங்கள் வாங்கினால், ஒரு வருஷத்திற்கு "கிராம வாழ்க்கை" இனாமாக அனுப்பப்படும். இதுவே நல்ல சமயம்.

"கிராம வாழ்க்கை"

மாதம் இருமுறை வெளிவரும் ஓர் தமிழ் பத்திரிகை
(விளம்பரங்களுக்கு உயர்ந்தது)

கிராமப் பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து, சீர்கேடடைந்திருக்கும் பல கிராமங்களை புனருத்தாரணம் செய்யவும், கிராம உத்தியோகஸ்தர்களின் முன்னேற்றத்திற்காகவும் வெளிவந்துலாவும் ஓர் சிறந்த பத்திரிகை. புஸ்தக ரூபமாய் உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சாகும்.

உள்நாடு வருஷ சந்தா ரூ. 4. வெளிநாடுகளுக்கு ரூ. 5.

சிலோன், சிங்கப்பூர், முதலிய இடங்களில் சந்தாதார்கள் சேர்க்க ஏஜன்டுகள் தேவை. நல்ல கமிஷன் கொடுக்கப்படும். மாதிரிப்பிரதி இனாம்.

மானேஜர்:—"கிராம வாழ்க்கை,"

மதராஸ்.

சமசார சுகத்திற்கு திவ்ய ஔஷதம்.

பீஜ்பந்த்

இரண்டு மணி நேரத்தில் அபூர்வ குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவருமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துரப்பியாசங்களினுல் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா 1-க்கு ரு. **2**. வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,
நெ. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதராஸ்.

இதுவரையிலும் வராதது! வெளியாகி விட்டது!!

(14 Ct. நிப்பு.)

சில்வர் கிங் பவுண்டன்பேனு பிரிடிஷ் மேட். இந்த பேனுக்கள் சொந்த ஆர்டர் மீது லண்டனில் இருந்து வரவழைக்கப் பட்டது. இதை உத்தியோகஸ்தர்களும் மாணவர்களும் உபயோகிப்பதற்கு வெகு அழகாய் இருக்கும். இதை எவ்விதமாய் வைத்துக் கொண்டு இருந்தாலும் இங்கி ஒழுகாது. எத்தனை நாள் உபயோகித்தாலும் எழுதும் முனை கெடாது. பென்சலினுல் எழுதுவதுபோல் சுலபமாயும் சுத்தமாயும் இருக்கும். இவ்வித சரசமான விலைக்கு சில நாள் தான் கிடைக்கும். இதன் விலை 1—க்கு ரூ. 1-8-0

எம். மாசிலாமணி அண்டு கம்பேனி,
நெ. 1, வடமலைமேஸ்திரி வீதி, சவுக்கார்பேட்டை, மதராஸ்.

1924-ஹு பூனு இண்டியன் இண்டஸ்ரியல் கண் காட்சியில் முதல் தரமான சர்ட்டிபிகேட் பெற்றுள்ளது.

இளமையும் பலமும் வீரமும் வன்மையும்

காம கேசரி

என்னும் வீரிய விர்த்தி மாத்திரைகளினுல் ஒரே மணி நேரத்தில் உண்டாகும் வீரமற்ற இளைஞரும் பலங்குன்றிய வயோதிகரும் சிற்றின்பசுகம் அடைய இதுவே மருந்து.

காம கேசரி பார்மஸி,
412, தங்கசாலை தெரு, சென்னை.

20 மாத்திரைகள்
விலை ரூபா ஒன்று.

நவீன தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ
உமர் பாக்ஷா	4	12	குணசுந்தரன்	1	4
கன்னிமுத்தம்	5	0	கல்பலதா	1	4
லண்டன் திருடர்	2	12	ஜீஜாபாய்	1	4
கற்பகசுந்தரி	2	12	வல்லப நாச்சியார்	4	1
சுந்தர்சிங்	1	8	அங்கையற்கன்னி	1	12
சித்திரரேகை	1	8	மாணிக்கவல்லி	1	0
கமலநாதன்	1	8	பரிமளா	1	0
மதனகாந்தி	1	8	மதிகெட்ட மனைவி	1	4
ஆநந்தமோஹன்	1	8	இராஜபுத்ர விஜயம்	1	4
லெக்ஷ்மிகாந்தன்	2	0	வித்யாசாகரர்	1	4
ஸ்ரீபாலன் பூபாலன்	1	12	சௌந்திர கோகிலம்	1	8
அமிர்த குமாரி	1	4	பத்மநாபன்	0	14
அமரநாதன்	1	4	ரெகுநாதன்	0	12
அமிர்தசாகரன்	1	4	ரெத்ன காந்தா	0	12
ஆத்மநாதன்	0	12	மர்மமுகி	0	12

விவரமான கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

லலிதா விலாச புஸ்தகசாலை,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

பாரிஸ் லேடிகளின் படுக்கை அறை அழகிய
விநோத போட்டோ படங்கள்.

இது பார்ப்பவர்களுடைய மனதை பிரமிக்கச் செய்து இருதரத்தாருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும்; இதில் ஆண் பெண்களின் விநோதமான போட்டோ படங்கள் பலவித நிறங்களோடு வெகு அழகாயிருக்கின்றன. இந்த போட்டோக்களை படுக்கை அறையில் வைத்தால் வெகு சுந்தரமாயிருக்கும். ஒவ்வொரு போட்டோக்களின் ரகஸ்யத்தை இதில் எழுத முடியாதென சுருக்கிவிட்டோம். 12 ரகம் செட் 1-க்கு ரூ. 3—0—0

விலாசம்:—ஈஸ்டு இன்டியா நாவல்டீ ஸ்டோர்ஸ்,
19-வது பீட், சௌகார்பேட்டை, மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இவ்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, சவுகார்பேட்டை, மதராஸ்.

அகஸ்தியர்
பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகல வித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்.

வந்து விட்டது! வந்து விட்டது!!

புதிய சரக்கு புதிய கடியாரம்.

"டிக்—டாக்" வால் கிளாக்



இப்பொழுது தான் வந்தது.
மிக்க அழகுள்ளது.

காலத்திற்கு சரியான மணியை
காட்டக் கூடியது.

முந்துங்கள்! முந்துங்கள்!!
முந்துங்கள்!!!

சுவரில் மாட்டக்கூடியது.

விலை 1-க்கு ரூ. 3 தான்.
தபால் செலவு வேறு.

விலாசம் :—

பீடர் வாச் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 27, மதராஸ்.

குறைந்த விலை! குறைந்த விலை!!

டெலியா

உலகப் பிரசித்தி பெற்ற எங்கள் டெலியா கைக்கெடியாரம், பொன், வெள்ளி, ரோல்ட்கோல்ட் கூடுகளில் கிடைக்கும்.

9 கியாரட் பொன் கேஸ் ரூ. 40.

14 கியாரட் பொன் கேஸ் ரூ. 50.

18 கியாரட் பொன் கேஸ் ரூ. 60.



ரோல்ட் கோட் (10-வருஷம் கெடாதது) ரூ. 38.

வெள்ளி ரூ. 35.

இந்தக்கைக் கெடியாரங்கள் அழகு பெற்ற லிவர்மூவ்மென்று உடையவை. ஈரம் தட்டாதபடி உறையும் உடையவை. எந்தக்கால நிலையிலும் உபயோகிக்கலாம். கெட்டுப் போகாதது.

இன்றே ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள்.

JALAL & SONS,
Rattan Bazarr Road,
MADRAS.

நல்ல சமாசாரம்

நாங்கள் உயர்ந்த புகையிலையினால் மிக்க குணமும் மணமும் உள்ள பட்டணம் பொடியும், ஆர், எஸ். சுகந்த மூக்குத்தூளும், ராஜன் பரிமள வாசனைப் புகையிலையும் சிறந்த முறையில் விசேஷமாய் தயார் செய்து இந்தியா முழுதும் அனுப்பிவருவதுடன் கீழ்க்கண்ட சாமான்கள் நல்ல சரக்காயும் விலை சரசமாகவும் வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சப்ளை செய்து வருகிறோம்.

வாசனை மிகுந்த அசல் காஜிபூர், பன்னீர், கல்கத்தா பரிமள சோப்புகள், வாசனை தைலம், அத்தர், பற்பொடி தேள் மருந்து, பரஹம்பூர் காரமஸாலா, ஜெர்மனி, கல்கத்தா, விசித்திரமான கலர் படங்கள், பீடி, சுருட்டு சிகரெட்டுகள் முதலியன எங்களிடம் கிடைக்கும்.

ரொக்கம் அல்லது வி. பி. பி. வெளியூர் ஆடர்களை உடனுக்குடனே கவனித்து தகுந்தவாறு அனுப்பப்படும். விலை விவரமடங்கிய புஸ்தகத்துக்கு எழுதினால் அனுப்புகிறோம்.

பி. வி. ராஜன் & கம்பெனி,
44, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி,
மதராஸ்.

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்துவிடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரூ. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரூ. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரூ. 6, 6-8. 8 கெஜம் 44" ரூ. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரூ. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரூ. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரூ. 6, 7-8.

கோகர் ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரூ. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்.